வார இதழ்.

ஆசிரியர் மு. கருணாநிதி.

முரசு 2 | சென்னை | 19—8—55 | வெள்ளி | ஒலி 21

# ★ சிறகிழந்தார் ★ சென்னை அமைச்சர்!

காமராசர் டெல்லி சென்ருர்—வாய் பேசாது கிடந்தவர் வாதாடுவதற்காகச் சென்ருர்!

கூடவே சுப்ரமணியமும் போனுர்! குல்லுகபட்டரிடம் தயாராளவர்; குருவாக நினைத்து வித்தைகள் கற்றவர்—தந்திரமாகவே பேசி எப்படியாவது திட்டத்திலே நல்லதொரு பங்கை பெறுவாரென்றுதான் நம்பினேம்!

தென்னகம் அதிர்கிறது; மக்கள் இதயங்களிலே தீக்காற்று எழுகிறது—என்று மிரட்டியாவது காரியம் சாதிப்பார்களென்று நினைத்தோம்!

பக்தவத்சலம் போயிருந்தாரே—திட்டக் கமிஷனிடம் நிலைமையைத் தெளிவுபடுத்தி, தேவையைப் பெறுவதற்கு உதவியாக இருப்பார் என்றுதான் கருதினேம்!

400-கோடி ரூபாய்க்கு திட்டமென்ருர்கள்-நம் நெஞ்சு இனித்தது!

புன்முறுவலுடன் வழியனுப்பினேம்! 'நம்முடைய தரித்திரத்தைச் சொலலி போர்முரசு தட்டுங்கள்'—என்று உற்சாகப் பண்பாடினேம்!

'நாங்கள் நடத்திய 5-ஆண்டுத் திட்டக் கண்டனத் தீர்மானங்கள் டெல்லியிலே குவிந்து கிடக்கும்—அதையும் அந்த அலட்சிய சித்தம் கொண்டோருக்கு நினைவு படுத்துங்கள்' என்று அறிவுரை வழங்கினேம்!

அவர்கள் கூடாரத்திலே இருந்துகூட பலப்பல உள்ளங்கள்-தென்னகம் தேய்ந்து வருவதை எண்ணி நொந்துபோன நல்லவர் உள்ளங்கள்-வாழ்த்து கூறின! 'தென்னுட்டிற்கு திட்டத்திலே சரியான பங்கு தேவை என்று குற்ருலத்திலே கூடி-வற்ருத செல்வமுடையதாக இந்த மண்ணை மாற்றுவதற்கு தீர்மானம் நிறைவேற்றினேமே; அதைத் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லுங்கள்' என்று தேசிய வட்டாரம் சிந்துபாடிற்று!

வடக்கு போல இனி தெற்கும் தழைக்கும்; இனி 'திராவிடங்கள்' வாயையும் அடைக்கும்—என்று சில்லறைகள் ஆருடம் கணித்தன!

காமராசர் கம்பீரமாக டெல்லியைப் பார்த்தார்! சுப்ரமணியம் விரல் நுனியிலே ஆதாரங்களை வைத்துக் கொண்டு நானூறு கோடி ரூபாய்த் திட்டத்துக்கு 'அவர்கள்' சம்மதத்தைப் பெற்றுவிடுவது போல பூரிப்புடன் இருந்தார்! பக்தவத்சலம் மட்டும் என்ன? அவருக்கும் பரவசம்தான்!

ஆனல் நடந்தது என்ன?

"நானூறு கோடி ரூபாய் போதாது. நண்பர்களே! தெற்கிற்குத் தொழிற்சாலைகள் அதிகம் தேவை. எனவே இன்னெரு கோடி ரூபாயையும் சேர்த்துக் கொள்!"—என்ரு சொன்னுர்கள்?

அப்படிச் சொல்லியிருந்தால்தான் நாம் ஆனந்தக் கடலில் மூழ்கியிருப்போமே! காமராசர் குழுவினர் சென்னை திரும்பியதும் 'ஆரத்தி'யல்லவா சுற்றியிருப்போம்!

பின் நடந்தது என்ன?

அய்யைய்யோ! நறுக்கி விட்டார்களே, நானூறு கோடி ரூபாய் திட்டத்தை! சம்மதம் பெற்றுவிடலாமென்று செறுக்குடன் சென்றவர்கள், செறுக்கழிந்தல்லவா திரும்ப வேண்டிய பரிதாபமான நிலைமை உருவாகியிருக்கிறது!

200-கோடி ரூபாய்களைத்தான் நமது திட்டத்திற்காக அனுமதிப்பார்களாம்!


-ஆணையிட்டுவிட்டது டில்லி ஆளும் வர்க்கம்! நம் அகத்திலே நெருப்பையும் கொட்டிவிட்டது!

புதிதாக இத்தனைத் தொழிற்சாலைகள் உருவாகுமே; இத்தனை ஆயிரம் தோழர்களுக்கு வேலைகிடைக்குமே; பூனை தூங்கும் இத்தனை லட்சம்பேர் வீடுகளிலே சோறு பொங்குமே; என்றெல்லாம் கனவு கண்டோம். அய்யகோ! அந்தக் கனவை கனவாகவே ஆக்கிவிட்டார்கள், நனவுபடுத்த நினைக்காத வஞ்சக வடக்கத்தியர்கள்!

"அடிமை நாய்களே! ஆலையா வேண்டும் உங்களுக்கு?" என்று அதட்டிக்கேட்பதுபோல் இருக்கிறது, விந்தியத்திற்கு அப்பாலிருக்கும் திட்டக் கமிஷனின் விசித்திரப் போக்கு!

★ தொடர்ச்சி 9-ம் பக்கம்

## கோல்தான் தப்பியது!




சிந்தித்தது—400 கோடி! சிதைந்தது—200 கோடி!

Best copy available

# அண்ணா — தி. மு. க. பற்றி ★ ஆங்கில ஏடு - "QUEST" ★

"க்வெஸ்ட்" (QUEST) என்று ஒரு பத்திரிகை. வெறும் வியாபார நோக்கத்தோடு துவக்கப்பட்டதல்ல! இந்திய கலாச்சாரக் கழகத்தின் சார்பாக, மாதமிருமுறை வெளியிடப் படுகிறது. இந்த அமைப்பு அகில உலகமெங்கும் கிளைகளைப் பெற்றிருக்கும் கலாச்சார விடுதலை காங்கிரசோடு (The Congress for Cultural Freedom) இணைக்கப்பட்டிருக்கிறது. சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், தத்துவஞானிகள், விஞ்ஞானிகள்—ஆகியோர் இந்தக் காங்கிரசின் அங்கத்தினர்கள். உலக மேதையான பெட்ரண்ட் ரஸ்ஸல் இதன் கௌரவத் தலைவர்களுள் ஒருவர். 1950-ம் ஆண்டு பெர்லின் மாநகரில் துவங்கப்பட்ட இந்தக் கழகம், சிந்திக்கும் உரிமைகளைப் பாதுகாத்து வளர்ப்பதொன்றையே தலையாய நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

இந்தியக் கிளை துவங்கியிருக்கும் 'க்வெஸ்ட்' பத்திரிகையின் ஆசிரியர் நிஸ்ஸிம் எசேக்கியல் என்பவர்.

முதல் இதழிலேயே தென்னகத்தின் அரசியல் நிலைமையை படம் பிடித்துக் காட்டும் நோக்கத்துடன் டி. ஆர் ராமையா என்பவர், "தெற்கில் காய்ச்சல்" என்னும் தலைப்பிலே கட்டுரை யொன்று வரைந்துள்ளார். அதில் திராவிடர் கழகம்—திராவிட முன்னேற்றக் கழகம்—ஆகியவற்றின் கொள்கைகளை தாக்குவதற்கு முயன்றிருக்கிறார் தோழர் ராமையா. இதோ, அதன் பகுதிகள் :

★ "திராவிடர் கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அதிக வேறுபாடுகள் கிடையாது. திராவிட நாட்டை அமைப்பதுதான் அவர்களின் குறிக்கோள். பெரியார் ('Great Man') என்று அழைக்கப்படும் ராமசாமி நாயக்கர் கட்சியை நிர்வகிக்கும் போக்கு பிடிக்காத காரணத்தால் விலகிவந்தோர் தி. மு. க. வைத் துவங்கியிருக்கின்றனர். தி. மு. க.வை சி. என். அண்ணாதுரை நடத்திச் செல்கிறார். அது திராவிடர் கழகத்தை விடத் தீவிரமாகவும், திட்டவட்டமாகவும் காரியமாற்ற விரும்புகிறது"

★

★ "இந்த அமைப்புகள் தெளிவற்ற கம்யூனிச நோக்கங்களையும் கொண்டிருக்கின்றன. வர்க்கமற்ற சமூகத்தை அமைப்பதைப்பற்றி அவர்களது ஏடுகள் முழங்குகின்றன. ஏழை மக்கள் தங்கள் தூக்கத்திலிருந்து விழித்து எழ வேண்டுமென்றும், பார்ப்பனர்கள் சுமத்தியிருக்கும் நுகத்தடியைக் கழற்றி எறிய வேண்டுமென்றும் அவர்கள் எடுத்துக் கூறுகிறார்கள். பெருந்தனக்காரன் பரம ஏழையைச் சுரண்டிச் சாப்பிடுவதை, பார்ப்பனர் பார்ப்பனரல்லாதாரைச் சுரண்டிச் சாப்பிடுவதுடன் ஒப்பிடுகின்றனர். இது ஆரியர்கள் திராவிடர்களைச் சுரண்டி வாழுகின்றனர் என்ற தத்துவத்துக்கு ஆதாரமாகக் கொள்ளப்படுகிறது. மார்க்ஸ்; லெனின்; மாசேதுங் — ஆகியோரிடமிருந்து மேற்கோள்கள் காட்டப்படுகின்றன. அண்ணாதுரை திராவிடர்களின் 'ஈ...' என்று வர்ணிக்கப்படுகிறார்"

★

★ "தி. மு. க. வைச் சேர்ந்தோரது எழுத்துக்கள் மயக்கம் தரும் வகையிலும், இரத்தம் கொப்பளிக்கும் வகையிலும் அமைந்திருக்கின்றன; படிப்போர் மனதை அப்படியே உணர்ச்சி வசப் படுத்தி விடுகிறது. அண்ணாதுரை போன்ற அறிவுவளம்மிக்கவரை அவர்கள் போற்றுவதும், நேசிப்பதும் எல்லை கடந்ததாய் இருக்கிறது. அவரை ஆசையுடன் அண்ணா—அதாவது 'மூத்த சகோதரன்'-என்றே அழைக்கிறார்கள்."

★

★ "வாசகர்கள் 'திராவிடம்' என்ற சொல்லிற்கு சேர்க்கப்படும் அடைமொழிகளைக் கேட்டு திகைப்படையலாம். ஆனால் அந்தப் பெயரைக் கேட்டதும் ஏராளமான மக்கள் மனம் குளிர்ந்து, உற்சாகத்தோடு திரள்கின்றனர்."

★

★ "(தி. மு. க.) ஒரு வெறும் குழப்பத்தை மட்டும் நோக்கமாகக் கொண்ட இயக்கமாக இருந்தால், அதற்கு சார்புடைய சிலரும் எதிர்க்கும் சிலரும் இருப்பதில் ஆச்சரியமேதும் இருந்திருக்காது. ஆனால் தி. மு. க. பெருந்தன்மை-தியாக உணர்ச்சி—கட்டுப்பாடு ஆகியவற்றிற்கும் நிறைய சந்தர்ப்பமளிக்கிறது. அவர்கள் நாடகமாடுகிறார்கள்; அதில் கிடைக்கும் வருமானத்தை பள்ளிகளுக்கு நிதியாக வழங்குகிறார்கள்; சிறைக்குப் போகத் தயாராயிருக்கிறார்கள்; அஹிம்சையைக்கூட (வாயளவிலாவது) போதிக்கிறார்கள்.

★

இப்படி யெல்லாம் நமது கழகத்தையும், கொள்கையையும் விளக்கவந்த கட்டுரையாசிரியர், வழக்கமாக ஆரியரும், வடநாட்டாரும் செய்துவரும் விஷமத்தனங்களையும் சிற்சில இடங்களில் கொட்டி யிருக்கிறார்; தி. க.; தி. மு. க.வின் கொள்கைகளைக் குழப்பியிருக்கிறார்.

நாம் வருணபேதத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறோமாம்! திராவிடநாடு கிடைத்து விட்டால் பார்ப்பனர்களை வெளியேற்றி விடுவோமாம்!—இப்படியெல்லாம் எழுதியிருக்கிறார்.

நாம் ஆரிய — திராவிடப் பிரச்னைகளைப் பேசுவதுண்டு! நாம் குறிப்பிடும் ஆரிய-திராவிட வேறுபாடு தென் ஆப்பிரிக்காவிலே கடைப்பிடிக்கப் பட்டு வரும் நிறபேதக் கொள்கையல்ல! இது தேசிய இனக் கொள்கை! தென்னகத்துக் குடும்பத்தைச் சேர்ந்த ஆந்திர, கேரள, கன்னட, தமிழ் மக்களை ஐக்கியப் படுத்துவதற்கு ஒரு பெயர் வேண்டும். எனவே சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்து 'திராவிடர்' 'திராவிட நாடு' — என்னும் பெயரை எடுத்துக் கொண்டோம். இதில் என்ன வருணபேதக் கொள்கை இருக்கிறது?—கட்டுரை ஆசிரியர் தோழர் ராமையா இதை மறந்தது வருந்தத்தக்கதுதான்!

பார்ப்பனர்களை வெளியேற்றுவது என்பது தென்னகத்துக்கு வெளியே நம்மைக் குறித்து எவ்வளவு பெரிய மோசமான பிரச்சாரங்களைக் குவிக்கும்—என்பதை இந்தக் கட்டுரை தெளிவு படுத்துகிறது. தி. மு. க. எதிர்ப்பது பார்ப்பனர்களையல்ல; பார்ப்பனீயத்தைத்தான்! இவ்வளவு விபரங்களைத் தந்த ராமையா ஏனோ இதை மறந்து விட்டார்!

இந்த வருணபேதக் கொள்கையை நாம் அனுஷ்டிப்பதாகக் கொண்டு மொத்தமாகவே ஆசிரியர் சொல்லுகிறார்—'நேரு இந்த இயக்கத்தை நான்சென்ஸ் என்றது சரிதான்' என்று! நம்முடைய பிரச்னைகளைச் சரிவரத் தெரிந்து கொள்ளாமல்—எந்தெந்த விதத்திலே இது 'நான்சென்ஸ்' ஆகும் என்பதற்கான காரணங்களைச் சொல்லாமல் — உலகெங்கும் பரவியிருக்கும் ஒரு கலாச்சார ஸ்தாபனத்தோடு உறவு வைத்திருக்கும் ஏடு தூற்றல் நடைபோடுவது, அது ஏற்றுக்கொண்டிருக்கும் மகத்தான பொறுப்பாம் சிந்திக்கும் உரிமையை பாதுகாக்கும் கடமைக்கே ஊறு செய்வதாகும் — இதை ஆசிரியர் உணர வேண்டுகிறோம்!

அண்ணா சினிமாப் படங்கள் மூலம் நாத்தீகம் பரப்புவது; ரஸ்புட்டினை நம்முடைய கொள்கைக்குத் தகுந்தார்போல் வளைத்துக் கொண்டது; ராதாவின் ராமாயணம்—இவையெல்லாவற்றையும் அவர் ஆதாரம் காட்டியுள்ளார்!

ஒரு இடத்தில் அவர் குறிப்பிடுகிறார், நம்முடைய அங்கத்தினர் தொகை குறைவானதென்று! 'ஒரு லட்சம் பேர் கொண்ட கட்சி' யென்று அரசாங்க சாட்சியாக விசாரிக்கப்பட்ட போலீஸ் உத்யோகஸ்தர் நீதி மன்றத்திலே குறிப்பிட்டதையும், 'தி. மு. க. விற்கு இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் பேர் அங்கத்தினர் இருப்பதாக' 'பிளிட்ஸ்' ஏடு எழுதியதையும் மறந்துவிட்டு எழுதிவிட்டார், ராமையா!

கடைசியாக அவர் கட்டுரையை இப்படி முடித்திருக்கிறார்:

★ அவர்களுடைய வெளியீடு ஒன்றில் நேரு நான்சென்ஸ் என்று சொன்னதைப்பற்றி குறிப்பொன்று காணப் படுகிறது. அந்த எழுத்தாளர் எழுதுகிறார் : "**பொங்கி எழும் ஆத்திரத்தோடு நாங்கள் அண்ணாவைத் திரும்பிப் பார்த்தோம்.** அவர் புன்முறுவல் பூத்தபடி, பெருந்தன்மையோடு சொன்னார், மறந்து விடுங்கள்; மன்னித்து விடுங்கள்' என்று! எனவே நாம் அதை மறப்

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

Bleed through

# தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 19—8—55 வெள்ளி

## பிணக்காடு – குணக்கேடர்!

சென்ற இதழிலே கோவா கொடுமை பற்றிய விளக்கங்கள் தந்து விடுதலை வீரர்களுக்கு நமது உளமார்ந்த வாழ்த்துக்களைக் குவித்திருந்தோம். வெள்ளையனிடமிருந்து விடுபட்ட இந்திய உபகண்டத்திலே ஒரு மூலையில் ஒட்டிக்கொண்டிருக்கும் போர்ச்சுக்கீசியக் கொடுமையாளர்கள், தங்களின் ஆதிக்கவெறித் தாண்டவத்தின் உச்சக் கட்டத்திலே நின்றவாறு உயிர்கள் பலவற்றை பொல பொலவென உதிர்த்துவிட்டார்கள் ஒரு நொடியில்—என்ற செய்தி கண்டு சிந்தை கலங்கினோம். "சுதந்தர"த் திருநாள் கொண்டாடப் படுகிறது இந்தியத் துணைக்கண்டத்தில்! அதே நேரம்—கோவா எல்லையிலே பிணங்கள் மள மளவென சாய்கின்றன! அய்யோ! எத்தனை கோரமான நிகழ்ச்சி! இருபத்தி எட்டு பிணங்கள் இந்திய எல்லையிலே விழுந்தன என்று கணக்கிடப் படுகிறது. கணக்கில் அகப்படாதவை எவ்வளவோ; அது தெரியாது! உலகத்தின் சந்து பொந்துகளிலேகூட விடுதலைச் சிந்து பாடப்படுகிற காலத்திலே — போலி கௌரவத்துக்கு ஆசைப்பட்டு போர்ச்சுகீசிய சர்க்கார் துப்பாக்கித் துரைத்தனத்தை தீவிரமாக்கத் துவங்கியிருக்கிறது. கோவா கொடுமை கண்டு குமுறுதார் இல்லை! கொதிப்படையாதார் கிடையாது! குமுறலும் கொதிப்பும் இந்தியத் துணைக் கண்டமெங்கும் பரவியிருக்கிற காரணத்தால் தான் அங்கிங்கெனாதபடி ஹர்த்தால்களும், அது-இது எனாதபடி சகல முற்போக்குக் கட்சிகளின் கண்டனக் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடைபெற்றிருக்கின்றன. இன்னும் நடைபெற்றும் வருகின்றன. கோவாக் கொடுமையை வன்மையாகக் கண்டித்து தி. மு. கழகமும் தனது குரலை நாடெங்கும் எழுப்பியிருக்கிறது. "கோவாமீது படையெடுக்க மாட்டோம்" என உறுதியாகக் கூறியிருக்கிறார், படுகொலை கேட்டு பதைத்ததாகக் கூறும் பண்டித நேரு அவர்கள். படை எடுத்தோ எடுக்காமலோ—அல்லது, ஒத்திவைக்கப்பட்டுள்ள 'சத்யாக்கிரகம்' மீண்டும் துவக்கப்பட்டோ, எப்படியோ-விரைவிலே 'கோவா' விடுதலை அடையப்போவது நிச்சயம். போர்ச்சுக்கீசியர் வெளியேறப் போவதும் நிச்சயம். பொம்மலாட்டக் கயிறு எத்தனை நாளைக்குத்தான் பயன்படும். ஒருநாள் அறுந்துதான் தீரும். அது யார் திரிக்கும் கயிறாக இருந்தாலும் சரி; அறுந்துவிட்டதாகத்தான் அடிமை நாடுகளின் புதிய சரித்திரங்கள் முழங்குகின்றன. அதனையொட்டித்தான் 'கோவா விடுதலை நிச்சயம்' என நாமும் எதிர்காலப் பலனை கணிக்க முடிகிறது.

விடுதலை வீரர்கள், எங்கேயோ ஒரு நாட்டில் போர்க்கொடி உயர்த்துகிறார்கள் என்று கேள்விப்பட்டாலே நாம் பூரிப்படைகிறோம். காரணம்; நாமும் ஒரு விடுதலைப் போரிலே அணிவகுத்து நிற்பதுதான்! அவர்கள் காணும் களங்கள் — நாம் இங்கு காணுகிற களங்கள்தான் என எண்ணிடும்போது புதியதோர் உற்சாகம் பிறக்கிறது நமக்கு! அந்தக் களங்கள் பற்றி இங்குள்ள ஆட்சியாளர்கள் வர்ணிக்கும் போதும், வருத்தம் தெரிவிக்கும்போதும், நமது களங்களிலே இந்த ஆட்சியாளரிடம் நாம் பட்ட இன்னல்களைச் சுட்டிக் காட்டவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

கோவாப் படுகொலை பற்றிப் பேசிய பண்டித நேரு அவர்கள், விடுதலை வீரர்களுக்கு ஊக்கமூட்டும் வார்த்தைகளை உதிர்த்திருக்கிறார்.

"கோவா எல்லையில் நுழையும் போராட்ட வீரர்களை நான் வாழ்த்துகிறேன்" என்று ஆசீர்வதித்திருக்கிறார்.

**"இரண்டு படைகள் ஒன்றை ஒன்று தாக்கிக் கொள்ளும்போது குண்டுகளைப் பரிமாறிக் கொள்வது இயற்கை. ஆனால் நிராயுதபாணிகளாய் நிற்போர் மீது குண்டுகளை அள்ளி வீசுவது என்ன நியாயம்?"**

பண்டித நேருதான் கேட்கிறார் இப்படி! இந்தக் கேள்வி களிப்பூட்டுகிறது விடுதலை விரும்பிகளுக்கு! ஆனால், இந்தக் கேள்வி கிளம்பும் அதே நேரத்தில், இதே போன்ற கேள்விக் குறிகளாக மாறி 'கோவா கொடுமை ஒழிக' என கூச்சலிட்டுச் சென்ற கூட்டத்தினர் மீது பம்பாய் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறார்கள். 14 பேருக்குப் படுகாயம்—நூறு பேர் காயப் பட்டனர்—தொழிற் சங்க காங்கிரஸ் ஊழியர் பத்மநாபன் என்பவர் கவலைக்கிடமான நிலையில் சாவோடு போராடிக் கொண்டிருக்கிறார் என்ற செய்தியும் வருகிறது.

பம்பாயின் முதல்வா—நேருவுக்கு அடுத்தபடி இந்தியாவின் முதல்வராகக்கூடியவர்—இத்தகைய தகுதிகள் பல பெற்ற மொரார்ஜி தேசாயின் முன்னிலையிலேயே ஆறு அடுக்கு கொண்ட பம்பாய் சர்க்கார் காரியாலயத்துக்கு முன்னிலையில் போலீசார் தங்கள் தோட்டா தர்பாரை நடத்தியிருக்கிறார்கள்!

அரசாங்க அலுவலகத்துக்கு விடுமுறைவேண்டுமென்றுதான் அவர்கள் கேட்டிருக்கின்றனர்! அதற்காகத்தான் அவர்களை நோக்கி துப்பாக்கிகள் அலறியிருக்கின்றன!

அண்மையில் பாட்னாவில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் எல்லோருக்கும் நினைவிருக்கலாம்; எட்டு பேர் பலியானார்கள்—அறுபதுக்கு மேற்பட்டோர் காயமடைந்தார்கள்.

நேரு குறிப்பிட்டாரே அதைப்போல பாட்னாவிலே ஆயுதந்தோடு அக்குரோணிக் கணக்கில் அணிவகுத்து வந்த படையினரோடு அல்ல போலீசார் மோதியது! நடமாடும் எஃகுக் கம்பிகளாம் மாணவத் தோழர்கள்மீது தோட்டா மழையைப் பொழிந்திருக்கின்றனர்!

பஸ் கட்டண உயர்வு குறித்து மாணவர்களுக்கும், கண்டக்டருக்கும் சிறிய சச்சரவு கிளம்பியிருக்கிறது. இதன் விளைவைத்தான் போலீஸ் புலிகள் தங்கள் வேட்டைக் காடாகப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

பாட்னா வைத்தியக் கல்லூரி பிரின்ஸ்பால் டாக்டர் நக்கன்ராம் தலைமையில் 100 கல்லூரி ஆசிரியர்கள்கூடி போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகம் முகாந்திரமற்றது என்றும், நேர்மையற்றது என்றும், கண்டித்துள்ளார்கள். இந்த வெறிச் செயலுக்குக் கண்டனம் தெரிவிக்கும் முகத்தான் பீகார் வைத்தியக் கல்லூரி மாணவர்கள் நடத்திய 'ஹர்த்தாலில்' கலந்துகொண்டு, மாண்ட தோழர்களுக்கு மரியாதை தெரிவிக்க மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஏராளமான மாணவர்கள் டிரெயின்கள், கப்பல்கள் மூலமாக வந்து கொண்டிருக்கின்றனராம்.

ஆகஸ்ட் 15-ஐ அலங்காரத் திருநாள் என்று கொண்டாடுகிறார்கள். ஆனால் அன்று பீகாரின் பெரும்பாலான நகரங்களில் மூவர்ணக் கொடி பறக்கவில்லை—கறுப்புக் கொடிகள்தான் வானைத் தழுவியிருக்கின்றன! பல விடங்களில் சுதந்திர தினக் கொண்டாட்டம் கைவிடப்பட்டதாம்!

**"நிராயுதபாணிகளைச் சுட்டு வீழ்த்துவது சர்வ தேச அமைதியின் அடிப்படைக்கே உலை வைப்பதாகும்"** என பந்த் பேசுகிறார்—பண்டித நேருவும் குறிப்பிடுகிறார். கோவா நிகழ்ச்சிக்கு மட்டுமே இந்த அறிவுரைகள் பிரயோகிக்கப்படுகின்றனவேயல்லாமல், இங்கே துப்பாக்கிகள் பேசுவதையும், நிராயுதபாணிகளான மக்கள்-பம்பாயிலே, பாட்னாவிலே, தூத்துக்குடியிலே, கல்லக்குடியிலே சுட்டுக் கொல்லப்படுவதையும் தடுக்க அந்தப் பொன்னுரைகள் பயன்படுவதேயில்லை.

***"சத்தியாக்கிரகிகள் பலாத்காரத்தில் இறங்கியதால், சிப்பாய்கள் தங்களைக் காத்துக்கொள்ள சுட்டார்கள்"*** என்று போர்ச்சுக்கீசிய சர்க்காரின் அறிக்கை கூறுகிறது. அதே போலத்தான் — பம்பாய்கள், பாட்னாக்கள், கல்லக்குடி, தூத்துக்குடிகள் நடைபெறும்போதும் இங்குள்ள சர்க்கார் அறிக்கை விடுகிறது பலாத்காரம் நடந்ததாக!

**"சட்டத்தை மீறுகிறவர்களை, கைது செய்ய உரிமையிருக்கிறதே யொழிய, துப்பாக்கிப் பிரயோகம் செய்வது தவறு"**

ஆகஸ்டு 15-ம் நாள் அலகாபாத் பண்டிதர் இது போல் மொழிகிறார்—மறு நாள் ஆகஸ்டு 16-ல் பம்பாயிலே துப்பாக்கி ரவை பொழிகிறது! பாட்னாவின் எதிரொலி மாறவில்லை! கல்லக்குடி, தூத்துக்குடிவடுக்கள் அழியவில்லை! கல்லறைகள் மறையவுமில்லை! ஆகவே, ஆதிக்க வெறியும் கொடுமைச் செயலும் சலாசர் உருவத்திலே மட்டுமல்ல; சமாதானம் போதிப்போர் உருவத்திலும் நடமாடுகிறது என்பதை கோவா விடுதலை வீரர்கள் மாத்திரமல்ல; குவலயத்திலேயுள்ளோர் அனைவருமே அறிந்து தெளிந்திட வேண்டும். அந்தத் தெளிவு அறப் போருக்குப் புதிய வலிவைத் தரவல்லது! அடுத்த வீட்டானுக்கு அறிவுரை வழங்கிவிட்டு, சொந்த வீட்டிலே கொள்ளி வைக்க வரும் குணக்கேடர்களைப் பற்றிய நல்லதோர் ஞாபகக் குறிப்பையும் தரத்தக்கது!

One side page dark

# கூட்டத்திலும்--குடும்பத்திலும்!

"வாங்கத்தான் வாங்க! என்ன; கடற்கரையிலே யிருந்தா வர்ரீங்க? கூட்டம் எப்படி?"

"துளைத்து விட்டேன்! துளைத்து விட்டேன்! பல நாளாக மனதிலே வைத்திருந்தவைகளை யெல்லாம் அவிழ்த்து கடற்கரை மணலிலே கொட்டி விட்டேன். இனிமேல் புதுக் கழகத்துப் 'பொறுக்கிப் பசங்க' தலையெடுக்க முடியாது!"

"அப்படி என்னப்பா பேசினீங்க? கொஞ்சம் சொல்லுங்களேன்."

"புதுக் கழகத்து மாஜி செயலாளர் இருக்கானே; அவனைப்பற்றி வெளுத்து விட்டேன். 'அவன் எங்கெந்த வீட்டுக்குப் போகிறான் என்கிற கணக்கெல்லாம் என்னிடம் இருக்கிறது' என்று ஒரு போடு போட்டேன்!"

"அப்படியானால் நாளை காலையிலே மஞ்சள் பத்திரிகை ஆசிரியர்கள் எல்லாம் நம் வீட்டுக்கு வந்து விடுவார்கள்!"

"ஏன்?"

"நீங்கள்தான் புதுக் கழகத்து தலைவரைப் பற்றிய புள்ளி விபரம் வைத்திருப்பதாகச் சொல்லி விட்டீர்களே; அதையெல்லாம் குறிப்பெடுத்துப் போகத்தான் மஞ்சள் பத்திரிகை ஆசிரியர்கள் வருவார்கள் என்கிறேன்."

"மஞ்சள் பத்திரிகைக்கு நிச்சயமாகக் கொடுக்க மாட்டேன்."

"ஏன்?"

"நம்மிடம் பத்திரிகையா இல்லை; பிரசுரிக்க?"

"சரி! பிறகென்ன சொற்பொழிவாற்றினீர்கள்?"

"என்னுடைய பேச்சிலேயே முக்கியமான 'பாயிண்ட்' என்ன தெரியுமா? மாம்பலம் எனும் தியாகராய நகரில் இருக்கிற சினிமாக்கார பசங்கள் எல்லாம் குடிகாரர்கள்; என்பதுதான்"

"இதை முன்பே எழுதியிருக்கிறீர்களே—ஒரு பெரிய நகைச்சுவை அரசரைக் குறிப்பிட்டு எழுதித்தான் டெலிபோனில் அவரது மனைவியாரால் படாத பாடு பட்டோமே; அத்தான்!"

"அதை ஏன் ஞாபகப் படுத்துகிறாய், இப்போது?"

"அத்தான்! இருந்தாலும் நீங்கள் குடிகாரர்களைப் பற்றி இப்படி அக்கரை எடுத்துக் கொண்டு அலையக் கூடாது!"

"ஏன்?"

"ஆமாம் அப்பா! அதற்குத்தான் சென்னை போலீஸ் இலாக்காவிலே ஸ்பெஷல் நாய்களையே வளர்க்கிறார்களாமே; உங்களுக்கேன் வீண் வேலை? அதுவுமில்லாமல் நம்ப சொந்தக்காரர்கள் எத்தனையோ பேர் குடித்துவிட்டு ஆடி, பற்களை யெல்லாம் இழந்து தவிக்கிறார்கள்! பெரிய பட்டியலே இருக்கிறது—எனக்கும் தெரியும்; உங்களுக்கும் தெரியும்!"

"சரி சரி, சும்மா இரு!"

"அது கிடக்கட்டும் அத்தான்; பிறகென்ன பேசினீர்கள்?"

"கண்ணீர்த்துளிக் கட்சி, சினிமாக் கட்சிதான் என்று நிரூபித்தேன். எனக்கு 'சான்ஸ்' கிடைக்கவில்லையென்ற பொறாமையால் இப்படிச் சொல்லவில்லை; நாவசைத்தால் போதும்—நானும் நாலூறு படங்கள் எழுதுவேன்-ஆனால் நான் சினிமாக்காரர்களை வெறுக்கிறேன்—'சினிமா ஒழிக' என்று வானதிர, கடலதிர முழங்கினேன்."

"பலே! பலே! கூட்டம் எத்தனை ஆயிரம் இருக்கும் அத்தான்?"

"பேசப் பேசக் கலைந்து கொண்டே யிருந்தார்கள்—அதனால் கணக்குத் தெரியவில்லை. போன வாரம் புதுக் கழகத்தான் கூட்டத்துக்கு இது அரைக்கால் பங்காவது இருக்கும்!"

"சரிப்பா! சாப்பிடுங்கள்! சினிமாவுக்குப் போகலாம்."

"எந்தப் படத்துக்கு?"

"அதான் நம்ப "ரத்தக்கண்ணீ"ருக்கு!"

# விஷ நாக்கு!

கல்லக்குடியிலும், தூத்துக்குடியிலும் திராவிட இனத்தின் மீது துப்பாக்கி ரவைகளைப் பொழிந்தவர் சென்ற கிழமை தூற்றல் கணைகளைப் பொழிந்திருக்கிறார்!

சொல்லம்புகள்! அதன் நுனியிலே பொறாமை என்னும் விஷம்!

பம்பாய் தமிழர்களிடையே பேசும்போது ஆச்சாரியார் குறிப்பிட்டாராம்:

"இங்குள்ள உங்களுக்கு ஒரு சிறந்த ஆட்சி கிடைத்திருக்கிறது. நீங்கள் அதிர்ஷ்டக்காரர்கள். ஆனால் உங்கள் ராஜ்ஜியத்தில் (சென்னையில்) இருந்திருந்தால் இவ்வளவு நல்ல ஆட்சி உங்களுக்குக் கிடைக்காது"

அதாவது, பம்பாயிலே நடக்கும் மொரார்ஜி தேசாயின் ஆட்சி நல்ல ஆட்சியாம்; சென்னையிலே நடக்கும் காமராசர் ஆட்சி நல்ல ஆட்சி அல்லவாம்!

உள்ளத்திலே ஒளிந்து கொண்டிருந்த பொறாமைக் கனலை வெளியே கொட்டியிருக்கிறார் வேதியர்!

அணுவெடிகளைப் பற்றி அமெரிக்காவுக்கு உபதேசிக்கிறார்! ஆனால் அவரோ உள்ளத்திலே உடைப்பெடுத்தோடும் அசூயை என்னும் சாக்கடைக்கு அணைபோட மறுக்கிறார்!

தேசியக் கூடாரத்திலேயே அவரது பம்பாய்ப்பேச்சு புயலைக் கிளப்பியிருக்கிறது!

டி. ஜி. கிருஷ்ண மூர்த்தி எம். எல். சி. 'தினமணி'யிலே எழுதுகிறார்: "அவர் (ஆச்சாரியார்) இந்த மாதிரி பேசியதைக் கண்டு நான் ஆச்சரியப்படவில்லை. இதைவிட இன்னும் மோசமாகப் பேசாமலிருந்தாரே என்பதுதான் ஆச்சரியம்" என்று!

குடந்தையிலே நடைபெற்ற கூட்டமொன்றில் கிளப் தலைவர் ஆர். கந்தசாமி மூப்பனார் இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்:

"சென்னை அரசாங்கமும் சரி; பம்பாய் அரசாங்கமும் சரி; மத்திய அரசாங்கமும் சரி; எல்லாம் காங்கிரஸ் அரசாங்கம் தானே! இதில் என்ன பாகுபாடு இருக்கிறது?"

—ஆனால் வேதியரின் கழுகுக் கண்களுக்கு 'வேறுபாடு' தெரிந்திருக்கிறது!

'ஆசிரியர் குறிப்பு' — என்ற பகுதியில் கோயங்காவின் ஏடாம் 'தினமணி'கூட கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறது:

"வேறு யாராவது பேசியிருந்தால் சர்க்காரைக் குறை கூறுவதற்கு ஒருவருக்கு உரிமை உண்டு என்ற ரீதியில் அதைப் பொருட்படுத்தாமல் விட்டுவிடலாம். ஆனால் ராஜாஜி போன்றவர்கள் பேசும்பொழுது சற்று அதிக ஜாக்ரதையுடன் பேசுவது அவசியமானது...பம்பாயிலுள்ள தமிழர்களிடையே பேசும்போது உபசாரமாக பம்பாய் சர்க்காரை வியந்து பேசியதில் தவறு இல்லை. ஆனால் சென்னையை ஒப்பிட்டது சற்று உசிதமற்றதுதான்!"

—தென்னாட்டிலே பார்ப்பனீய - பனியா கூட்டின் முன்னணிக்குத் தலைமை வகிக்கும் 'தினமணி'யே சி. ஆர். மீது சீறியிருக்கிறது. தப்பு—என்று அவர் தலையிலே குட்டி உட்கார வைக்கவில்லை! அஜாக்ரதையாக உளறிவிட்டாரே—என்று அனுதாபப்பட்டிருக்கிறது!

ஐயோ, காமராசரே! தீண்டாமைச் சுவரொட்டிகளை 'வாபஸ்' வாங்கி, பார்ப்பனர்களின் தலையிலே பனிக்கட்டியைத் தூக்கிவைத்து என்ன பயன்? அந்த வட்டாரம் விஷம் கக்கிக் கொண்டுதானே இருக்கிறது!

★

**வருந்துகிறோம்.**

பொன்மலை தோழர் ஜி. பராங்குசம் அவர்களின் தந்தையார் குருசாமி அவர்கள், சென்ற 11—8—55 அன்று இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். அன்னாருக்கு வரும் 21—8—55 ஞாயிறு காலை 9 மணிக்கு, பொன்மலை திராவிட வாலிபர் கழகத் தோட்டத்தில் 'நீத்தார் நினைவு' நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது.

★★★ "வேலை முடிந்து விட்டது"—மலையாள மூலத்திலிருந்து மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. இதன் ஆசிரியர் தகழி — சிவசங்கரம்பிள்ளை கேரளத்து சிறுகதை உலகத்தில் ஒளி வீசும் சுடராக இருப்பவர்; முற்போக்கு எண்ணங்கள் மிகப் படைத்தவர்! அவருடைய 'இரண்டு இடங்கழி'; 'தெண்டி வர்க்கம்'; 'தோட்டியின் மகன்' — போன்ற அற்புதக் கலைப் படைப்புகள் மலையாள மாந்தரிடையே பெருமதிப்பைத் தேடித் தந்திருக்கின்றன.

தமிழாக்கம்: நாஞ்சில் கி. மதிசூதனன்.

# தகழி
# வேலை முடிந்துவிட்டது!

பெண்ணுகப் பிறப்பவளுக்கு வாழ்விலே ஒரே நோக்கந்தானிருக்க முடியும். குழந்தை உற்பத்தி—பெற்ற குழந்தையை வளர்ப்பது—அதைத் தவிர அந்த உடல் அமைப்பிற்கு வேறென்ன வேலை?

பெறுவது! அதன் மூலம் மனித சமூகம் பூண்டற்றுப் போகாமலிருப்பது! அவ்வளவுதான்.

நகரத்தின் தெருக்களிலே அலைந்தோடிக் கொண்டிருந்த அந்த அபலை பருவ மெய்தினுள்—எனவே கர்ப்பிணியானுள்! எதற்காக அவள் பிறந்தாளோ, அந்தப் பொறுப்பு நிறைவேறிவிட்டது. அவள் பெற்றெடுத்தாள். அவளது மார்பு எதற்காக இயங்கிற்றே அந்தப் பணி அப்படியே நிறைவேறிற்று. அந்தக் குழந்தையை தோளிலே தூக்கிக் கொண்டாள். வழி நடக்க ஆரம்பித்து விட்டாள், வாழ்வதற்காக.

கர்ப்பிணி தாயாகும் நேரம். சில கஷ்டங்களை—வேதனைகளைத் தாங்க வேண்டியவளானுள். ஒரு தாயாக அவள் திகழ, வேதனைத் தீயை மிதித்திருக்கிறுள்! அதனுலே வெந்து போனது அவள் உள்ளம்! அந்தக் குழந்தை ஒரு பெருஞ்சுமை அவளுக்கு. அன்று அவள் ஒரு சுதந்திரப் பறவை. கவலையின்றிப் பறந்தாள். கிடைத்தது முழுமையும் அவளுக்கே. இப்போது அவளுக்குக் கிடைப்பதிலே இன்னொரு ஜீவன் உரிமையோடு காத்திருக்கிறது, பங்கு பெறுவதற்காக.

அந்தக் குழந்தை வளரவேண்டும். அவள் ஆசை இது. அதைப் பற்றிய எதிர்கால எண்ணங்கள் அவளுக்குண்டா? இருக்கலாம். எதிர்பார்ப்பதுதானே ஆசைக்கு அளவுமுறை. அந்தக் குழந்தை வளர்ந்து. அது தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்றெல்லாம் அவளுக்கு ஆசையிருக்கலாம். ஏன் அதைக் கண்ணிமைபோல் காப்பாற்றுகிறுள்? எத்தனை அன்புக் கொஞ்சு மொழிகள்! அரவணைப்பு! தாலாட்டு! எதற்காக? இப்போது அது தரும் முத்தங்களைச் சுவைக்கிறுள்—ஆனந்திக்கிறுள்! அப்படியானுல் அவளுக்கு எதிர்காலத்தைப் பற்றிய இன்பக் கனவுகள் உண்டு!

பத்து மாதம் சுமந்து, வேதயிலே துவண்டு பெற்றுள். அவளது ஜீவ ரத்தத்தைப் பொழிந்து அதை வளர்க்கிறுள். தாயல்லவா? கொஞ்சம் துன்பத்தை அனுபவிக்கத்தானே வேண்டும்! அப்படியானுல் அது திருப்பிக் கிடைக்க வேண்டும், பலனுக, என்று விரும்பலாம். மனித சமுதாயத்திற்காகப் பெற்றெடுத்து—அதற்காக வளர்த்தாக எந்தத் தாயுமில்லை. அவளுக்காகப் பெற்றுள்; வளர்த்தாள்; தந்தையிருந்தாலும், இல்லாவிட்டாலும்! சுயநலம் தான்.........அல்லாவிட்டால் கூலிக்காக மாரடிப்பு!

அப்படியானுல் ஆசைக்குக் காரணம் புரிகிறதல்லவா? பெறுவது; வளர்ப்பது; அதுவே வேலை; அதற்குப் பலன் வேண்டும். அந்தத் தொழிலின் இயல்புதான் ஆசை!

அந்தக் குழந்தை நடக்க ஆரம்பித்தது. அவளது வயிறு மீண்டும் புடைக்க ஆரம்பித்தது. அவள் ஒரு பெண். பெறுவதற்காகப் பிறந்தவள். பெறுவதற்கென்றே அவளது உடல் உருவாக்கப்பட்டது. பிச்சைக்காரிதான் அவள்.

என்றாலும் அவள் எப்படியோ சாப்பிடுகிறுள். உடலிலே தசைகள்! இன்பவெறிப் பசைகளுக்கு அடிமையான சதைகள்! உணர்வும், துடிப்பும் கொண்ட மாமிசங்கள்—திரும்பவும் தாயானுள். ஒன்றை இடுப்பிலே தாங்கினுள். அடுத்த குழந்தையை கையிலே பிடித்துக் கொண்டாள். ஆமாம்; அந்தப் பிச்சைக்காரி எச்சில் இலை நோக்கி நடக்கலானுள்.

பிச்சை சோற்றிலே மூன்றில் ஒரு பகுதிதான் அவளுக்கு. சில வேளை குழந்தைகளுக்கே போதுவதில்லை. அப்போது அவை 'கோ' வென்று கதறியழும். அவளது வயிறு எரியும்; அவளுக்குக் கோபம் வரும்.

இரவு அவளால்தூங்கமுடியாது. இரண்டு குழந்தைகளும் அழும்.

நடக்கும் குழந்தை நடக்க முடியாது அழும்போது இரண்டையும் இரண்டு இடுப்பிலே தாங்கிக் கொண்டு நடப்பாள். அப்படி எவ்வளவு தூரத்திற்குத்தான் அவள் சுமை தாங்கியாக உலவ முடியும்?

தாங்கமுடியாத சுமையின் கோரத்தை அவளது முகம் பளிச்சிட்டுக் காட்டும். சில வேளை எண்ணெயின்றிக் காய்ந்து கிடக்கும் பரட்டைத் தலைமயிரைப் பிடித்திழுத்து மூத்த குழந்தையை அதட்டுவதைப் பார்க்கலாம். அழும் இளைய குழந்தையின் மூக்கையும், வாயையும், பல்லை நறநற வென்று கடித்து. ஏதோ முணுமுணுத்துக் கொண்டு, மூடுவதைப் பார்க்கலாம். எல்லாம் தன்னை மறந்து செய்கிறுள். அவ்வளவே!

மரநிழலில் மடியிலே தலைசாய்த்துப் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தைகளின் தலையை வருடி பேன் பார்ப்பாள்; அவர்களது உடலைத் தழுவிக் கொண்டிருக்கும் மண்ணைத் துடைத்துக் கொண்டிருப்பாள்; கண்களிலே வழியும் கண்ணீரைத் துடைத் தெறியும் மார்க்கமற்றவள்! அவள் தூங்கட்டும்; நல்ல நித்திரையிலாழ்ட்டும். அதுவுமில்லா விட்டால்!

வீட்டுப் பெண்கள் அவளோடு பேசுவதுண்டு. 'ஏனடி, ஒன்றல்ல, இரண்டாச்சே'-என்று.

"ஆண்டவனளித்ததம்மா. நான் வளர்ப்பேன்" — அவள் ஆசையோடு பதில் சொல்லுவாள்.

"கொஞ்சம் சோறும், நீரும் கிடைத்தால், நீரை நான் அருந்தி விட்டு, சோறூட்டி அவர்களை நான் வளர்ப்பேன்" என்று கூறி விட்டு, ஆனந்த வெள்ளத்திலே மிதந்து போகுமவள், இளைய குழந்தையின் நெற்றியிலே முத்த மழை பொழிவாள்.

இரக்க சிந்தையுள்ள ஒரு வீட்டுக்காரி சொன்னுள்:

"எத்தனையோ பேர் குழந்தைக்காக வரம் வேண்டுகிறுர்கள்: கோயில் குளம் சுற்றுகிறுர்கள்!"

அடுத்தவள் அதை ஆமோதித்து விட்டுச் சொன்னுள்: "ஆமாம்; வயது காலத்தில், எங்காவது சென்று பிச்சையெடுத்து, இந்தக் குழந்தைகள் அவளைக் காப்பாற்றும்"

பிச்சைக்காரியின் குழந்தைகள் தான்! என்றாலும் அவர்களுக்கும் ஆசைகளுண்டு.

ஆனுல் உலகத்தின் இன்பப் பொருள்கள் அவர்களுக்காக விதிக்கப்படவில்லை என்பது அவர்களுக்கெங்கே தெரியப் போகிறது?

பிறந்த காரணத்தாலே அது அவர்களுக்குரிமையுள்ளதுதான்—அதுதான் அவர்களது ஆசைகளுக்குக் காரணமாகயிருக்கலாம்.

காப்பிக் கடைகளிலும், வெற்றிலை பாக்குக் கடைகளிலும் இன்பச் சாற்றின் நீருற்றுகத் தொங்கிக் கொண்டிருக்கும் பழக்குலைகளைச் சுட்டிக் காட்டி குழந்தைகள் அழும். அவள் குலை நடுங்குவாள்! கிடைக்காமல், அவைகள் அழுகையை நிறுத்தாது. விளையாட்டுக் கருவிகள்—பொம்மைகள் அவர்களுக்கு வேண்டும். அவள் என்ன செய்வாள்? அவள் திருடியிருக்கிறுள்! அப்படி சில எண்ணங்களை நிறைவேற்றியிருக்கிறுள். சில ஆரம்பத்திலேயே சிதைந்து விட்டன.

குழந்தைகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற எண்ணம், எப்படி அவள் உள்ளத்திலே குடி புகுந்தது? ஓ, தவறு! அவள் பெண்ணுய்ப் பிறந்திருக்கிறுளே! அந்த தசைக் கூட்டங்களின் குறும்பு! இயற்கையது! வளர்க்கின்ற பொறுப்பும் பெண்களுக்குத்தானுண்டா? ஆமாம், அவர்களுக்கு மட்டுந்தான். உண்மையில் இது ஒரு பெருத்த அநீதி. அவளும், அந்தக் குழந்தைகளும் பிச்சைக்காக அலைந்து திரியும்போது, அந்தக் குழந்தைகளின் பிறப்புக்குக் காரணமானவர்களும் அவ்வழியே நடந்து கொண்டிருக்கலாம். அவர்களுக்கு எந்தவித பொறுப்புமில்லை. அநில் அநீதி நெளிகிறது! அக்கிரமம் கொக்களிக்கிறது! மனித சமுதாயத்தின் தேவையான பொறுப்புதான் குழந்தைகளை வளர்ப்பதென்றுல், ஆணுக்கு அந்தப் பொறுப்பு வேண்டாமா?

அவன் தப்பிவிடுவதா? அது கூடாது. பெண்ணிற்கு பிரசவ வேதனை உண்டாகும்போது ஆணிற்கும் அதில் பங்கு தேவை. பெண்ணிற்கு பாலூட்டும் மார்பு ஒன்றுபோதும். மற்றென்று ஆணுக்கிருக்க வேண்டும். அப்படியானுல் கட்டவிழ்த்துவிட்ட காளை போல, காடு மேடு சுற்றமாட்டான். குழந்தையைக் காப்பாற்ற அவன் ஓடி வருவான்.

ஓ! தேவையற்ற சிந்தனை ஓட்டம்! அல்லவா? பரவாயில்லை.

இடுப்பிலே தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை கீழே இறக்கினுள். மீண்டும் அவளது வயிறு சுய உருவத்தை இழந்தது!

தவறுதல் ஒருமுறை ஏற்படலாம். அன்று அவள் உலகம் தெரியாதவள். தசை உணர்ச்சியின் உரசலிலே—துடிப்பிலே எதிர்கால விளைவுகளைப் பற்றி அவள் தெரிய முடியவில்லை, தவறினுள்! இரண்டாவது முறையும் அதே தவறு! இத்தனையும் சகித்துக் கொண்டாள். இத்தனை பாரத்தையும் சுமந்தாள். மூன்றுவது முறையாக அதே தவறு; இது சரியில்லை! இனியும் அடங்கியொடுங்கி நடக்க அவள் கற்றுக் கொள்ளவில்லையா? விபரீத விளைவுகளைப் பற்றி அவள் புரிந்து கொள்ளவில்லையா?

அவள் பெண். பெண்ணுெருத்தி இவ்வளவு குழந்தைகளைத்தான் பெறலாமென்று சட்டமில்லை.

ஓரிரவு. மூத்த குழந்தை பழத்திற்காக அழுதது. அன்று காலையிலே, விசிறியெறியப்பட்டு சாக்கடையிலே கிடந்த பழத்தின் ஒரு பகுதியை அந்தக் குழந்தை ருசித்தது. அந்த ருசி அதன் நாவிலே நிலைத்துவிட்டது. ஆகவே அது அழுதது. அடுத்த கடைத் திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்த ஒருவன் அழுகுரல் கேட்டு விழித்தான். விரைந்தான். அவனும் ஒரு பிச்சைக்காரனுகயிருக்கலாம். அவனும் அவளும் அழுகையின் காரணத்தைப்பற்றி சர்ச்சை செய்து கொண்டார்கள். ஒரு முடிவிற்குஅவர்கள் விரைந்திருக்க வேண்டும். அவனது மொத்த மூலதனம் இரண்டணு! அவள் அதைப் பெற்றுக் கொண்டாள். அழுத குழந்தை பழம் சாப்பிட்டான்! தூங்கிவிட்டான்!

○ தொடர்ச்சி 8-ம் பக்கம்

# புதையல்

மு. கருணாநிதி

**சென்ற இதழில்.....**

பரிமளா, அம்பலத்தின் பங்களாவிலிருந்து விடுதலை பெறுகிறாள். அதே சமயம், துரை அம்பலத்தின் கையில் சிக்குகிறான். விடுதலை பெற்று மாயாண்டிக் கிழவருடன் வரும் பரிமளாவைக் கடந்து, துரை அடைபட்டுள்ள வண்டி போகிறது. கிழவரும் பரிமளாவும் அதைக் கவனிக்காமல் பயணம் நடத்துகிறார்கள்.

## 36. “நூர்ஜஹான்”

**“எழுவானுக்குந் தொழுவானுக்குந் இடையிலே...**
**காக்கை மூக்கு நிழலிலே...**
**கள்வர் புகும் வழியிலே...**
**கண்டாலும் ‘கம்மாளர்’ கண்ணிலே...**
**எழுபது கோடி பசும்பொன்... ”**

“இந்த வழியாக எங்கே போகிறோம்?” என்று கிழவரைப் பரிமளா கேட்டாள். ‘மனோரா பக்கம் போய்விட்டு புதுப்பட்டினம் போகிறோம்’ என்றார் அவர். ‘அவர் எப்படியிருக்கிறார்? எங்கே யிருக்கிறார்?’ என்று அவளால் கேட்காமலிருக்க முடியுமா? கேட்டாள். ‘புதுப்பட்டினத்திலேதான்’ என்று கிழவரும் பதில் சொன்னார். பதில் சொன்னாரே தவிர, அவர் உள்ளம் ஒரே குழப்பமாக இருந்தது. அம்பலத்தின் சூழ்ச்சியால் துரைக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று அவர் கருதினார்.

மனோராவிலே துரையிடம் பரிமளாவை ஒப்படைப்பதாகச் சொன்னது பொய் என்பது, பரிமளா பங்களாவிலே இருந்ததால் புலனாகிவிட்டது. பரிமளா பெயரைச் சொல்லி, துரையை ஏமாற்றவே அம்பலம் திட்டம் தீட்டியிருக்கவேண்டுமென்று தீர்மானித்தார் கிழவர். இந்தச் செய்தியைப் பரிமளாவிடம் சொல்லி அவளைப் பயமுறுத்த விரும்பவில்லை அவர். அதனால் சிந்தனையில் ஆழ்ந்தவாறு மௌனமாக நடந்து கொண்டிருந்தார். பரிமளாவும் அவரைத் தொடர்ந்தபடியிருந்தாள்.

புதுப்பட்டினம் போனதும், கிழவரிடமும் அத்தானிடமும் அம்பலத்தின் செய்கைகள் அத்தனையும் ஒன்றுவிடாமல் சொல்லி, அவருக்குச் சரியான தண்டனை கிடைக்கஏற்பாடு செய்யவேண்டுமென்று மனதுக்குள் முடிவு கட்டிக் கொண்டாள். அதோடு அப்பாவி துக்காராமையும் விடுவிக்க வழி கண்டுபிடிக்க வேண்டுமென்று உறுதி கொண்டாள். இப்போதே துக்காராமைப்பற்றி மாயாண்டிக் கிழவரிடம் சொல்லிவிட அவளுக்கு ஆசைதான்!—ஆனால், அவரது மௌனத்தையும் சிந்தனையையும் அவள் கலைக்க விரும்பவில்லை. அவரிடத்திலே அவள் வைத்திருந்த மதிப்பின் காரணமாக அவர் பின்னாலேயே போய்க் கொண்டிருந்தாள். புதுப்பட்டினம் போனதும், முதல் வேலை துக்காராமை விடுவிப்பதுதான்—என்று அவள் நெஞ்சுக்கு அவளே சொல்லிக் கொண்டு இருண்ட பாதையிலே கிழவரோடு சென்றாள். நீண்ட நேர மௌனத்திற்குப் பிறகு கிழவர் அவளைப் பார்த்து, “ஏன் பரிமளா! நீயும் துரையும் முதலில் எங்கே-எப்படி சந்தித்தீர்கள்?” என்று கேள்வி யொன்றை வீசினார். அந்தக் கேள்வி அவருக்கு அத்தனை அவசியமில்லையென்பது அவளது பதிலை எதிர்பார்க்காமல் அவர் முன்னோக்கி நடந்து கொண்டிருந்ததிலிருந்தே நன்றாகத் தெரிந்தது. பரிமளா அந்தக் கேள்வியை அப்போது எதிர்பார்க்கவில்லை. அதனால் பதில் சொல்லத் தயங்கியவாறு சென்றாள். “ஓகோ, சொல்ல வெட்கமா இருக்கா?” என்று கேட்டுக் கொண்டே கிழவரும் நடந்தார்.

வெட்கமாகத்தானிருந்தது அவளுக்கு! ஒரு இளம் பெண்ணைப் பார்த்து, எதிர்பாராத நிலையிலே ஒரு கிழவர் இது போன்ற காதல் சம்பந்தப்பட்ட கேள்வியை ஏவுவதென்றால் வெட்கமாக இருக்காதா என்ன? வேதனையையும் விலக்கிடக்கூடிய வெட்கம் சூழ்ந்தது அவளை! அந்த வெட்கம்; அவள் நெஞ்சிலே பழைய நிகழ்ச்சிகளைக் கொண்டுவந்து நிறுத்தியது. கிழவரின் வினாவுக்கு விடை கிடைக்கவில்லையே தவிர, அந்த வேல்விழியாளின் இருதயத் திரையிலே அந்த இன்ப நினைவு நிழலாடத் தொடங்கி விட்டது.

★

பட்டுக்கோட்டைப் பள்ளியிலே அன்று ஆண்டு விழா. புதிதாக வந்திருந்த தலைமை ஆசிரியர் என்றுமில்லாத புதுமையாக அன்று பெரியதோர் விழாவுக்கு ஏற்பாடு செய்து விட்டார். மாணவர்களாகிய எங்களுக்கெல்லாம் தாங்க முடியாத உற்சாகம். காலை முதல் மாலை வரை படிப்பு,படிப்பு என்று இருந்த எங்கள் வாழ்க்கையிலே அந்த ஆண்டுவிழாச் செய்தி ஒரு நல்ல மாற்றத்தைத் தருவதாக அமைந்தது. புதிய தலைமை ஆசிரியர் புரட்சிக் கருத்துகளுக்கு மதிப்பளிக்கக் கூடியவர். பழைய எண்ணங்கள்—பாசி பிடித்த நம்பிக்கைகள்—அவருக்கு அறவே பிடிக்காது! அதனால் அந்த ஆண்டு விழாவையும் புதுமையான வழியிலே நடத்திக் காட்ட ஆர்வம் கொண்டார். காலையிலே மாணவ மாணவிகளின் அணிவகுப்பு!—மாலையிலே மாறு வேடப் போட்டிகள்—விளையாட்டுப் போட்டிகள் பரிசளிப்பு விழாக்கள்—இரவு நாடகம்! நாடகத்தை மாணவர்களே நடிப்பதற்கு பயிற்சி பெற போதிய அவகாசமில்லாதலால் வேறு ஒரு நாடகக் குழுவினரை நாடகத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். வருவோர் போவோரைக் கவனிக்கவும், கூட்டத்தினரை சரியானபடி சமாளிக்கவும், மாணவர் தொண்டர் படையொன்று நிறுவப்பட்டிருந்தது. மாணவிகள் தொண்டர் படையிலே நானும் ஒருத்தி!

இரவு நாடகம் ஆரம்பமாயிற்று. தொண்டர் படைச் சேவகியாக வேலை பார்க்கும் எனது கவனமெல்லாம் நாடகத்திலேயே இருந்தது. நாடகத்தின் பெயர் ‘நூர் ஜஹான்’. நூர்ஜஹானாக ஒரு அழகி நடித்தாள். ஆகா, அவள் நடிப்பை எப்படித்தான் வர்ணிக்க முடியும்!

‘சரித்திரத்திலே வரும் நூர் ஜஹான்தானோ இவள்—இல்லை, இவள் அவளைவிட அழகானவள்’ என்று வியந்தனர் மாணவர். தன் கணவன் ஷேர்கான் கொல்லப்பட்டபோது அந்த அழகிக்கு ஏற்பட்ட சோகப் பெருவெள்ளமும், அவன் கொல்லப்பட காரணமாயிருந்த தன் அழகை நினைத்து அவள் சிந்திய கண்ணீரும்—அப்பப்பா! இப்போது நினைத்தாலும் மெய் சிலிர்க்கிறது! ஆட்டபாட்டங்களிலே—ஆனந்த லாகிரியிலே வாழ்வை விரட்ட கங்கணம் கட்டிக் கொண்ட காவலன் ஜஹாங்கீரின் கட்டிலறை மோகினியாக அவள் மாறும் கட்டம்—அதன் பிறகு நாடாளும் அவள் திறமை எல்லாமே அற்புதம்! அற்புதம்! சரித்திரத்தில் மட்டுமல்ல; நாடகத்திலேகூட!—பூ ஏந்திய அந்தப் பூங்கோதையாக நடித்த அழகிக்கு அன்று அளவில்லாத பாராட்டுகள்! இடையிடையே சபாஷ் கரகோஷம்! ஆண்டு விழா வெற்றிக் கட்டத்தை எட்டிப் பிடிப்பது அங்குள்ள சில பொறாமைக்காரர்களுக்குப் பிடிக்கவில்லை. ‘புதிதாக வந்த தலைமை ஆசிரியர் ஏதேதோ செய்கிறார்—எத்தனையோ புராண நாடகமிருக்க—இந்த சரித்திர நாடகந்தானா கிடைத்தது’—எனச்சிறியவர்கள் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து நின்றார்கள். அவர்களின் தீய முடிவுப்படி நாடகம் நடக்கும்போதே பந்தலுக்குத் தீமூட்டப்பட்டுவிட்டது! மக்கள் சிதறியோடினர். நல்ல வேளை, நாடகம் நடந்த இடத்திற்கும், பள்ளிக் கட்டிடத்திற்கும் கொஞ்ச தூரம். அதனால், தீ பள்ளிக் கூடத்திலே எட்டவில்லை. கயவர்கள் ஏற்பாடு செய்திருந்த காலிகளின் குழப்பம் ஆரம்பமாயிற்று. நடிகர்கள் மூலைக்கொருவராகப் பறந்தனர். நான் தொண்டர் படை சேவகி ஆயிற்றே—அங்குமிங்கும் ஓடி அவசர உதவிகள் செய்ய முற்பட்டேன். அப்போது நாடகத்திலே நூர்ஜஹான்

## வீர வணக்கம் செலுத்துகிறோம்!

அயலவர் ஆதிபத்யம் அகற்றப்பட வேண்டுமென அறப்போர் தொடுத்த விடுதலை வீரர்கள் பலர், கோவா எல்லையிலே கோர மரணத்தை முத்தமிட்ட செய்தி நம் நெஞ்சிலே வேலாகப் பாய்கிறது! தூய நற்கொள்கைக்காகத் துப்பாக்கி ரவைகளை எதிர்த்து துணிவோடு நடைபோட்ட அந்தத் தியாகச் செம்மல்களின் திருநாமம் ‘வாழ்க, வாழ்க’ என வாழ்த்துகிறோம்; காயம்பட்ட காளையர்க்கு நம் வீர வணக்கத்தையும் காணிக்கையாக்குகிறோம்.

வேஷம் போட்ட பெண்மணி தன்னந்தனியாக ஓடிக்கொண்டிருந்தாள். 'அய்யோ, தனியாக ஓடுகிருளே' என்று நானும் துணைக்கு ஓடினேன். அவளை அழைத்துக்கொண்டு பள்ளிக்கூடப் பக்கம் போனேன். அதற்குள் பந்தலில் கலசம் அதிகமாகி, போலீசாரின் தடியடிப் பிரயோகம் துவக்கப்பட்டுவிட்டது. ஒரு புறத்திலே தீ! மறுபுறத்திலே கலகம்! நானும், அந்த அழகியும் பள்ளியிலே ஒரு வகுப்பறைக்குள் போய் நுழைந்துகொண்டோம். கலகக்காரர்களிடமிருந்து அந்த நடிகையை தப்புவிக்க வேண்டுமென்று நான் பெரிதும் கஷ்டப்பட்டேன். வகுப்பறைக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டுக் கொண்டோம்.

'நூர்ஜஹான்' என்னைப் பார்த்துக் கேட்டாள்: ''மிகவும் நல்லவளாயிருக்கிருயே; நீ இந்த ஊர் தானு?'' என்று!

''மருங்கப்பள்ளம் என் சொந்த ஊர்'' எனக்கூறி என்னைப் பற்றிய விபரங்களை அவளிடம் சொன்னேன். அவள், என் பெயரையும், என் அப்பா பெயரையும் இரண்டு மூன்று தடவை திருப்பித் திருப்பிக் கேட்டாள். வெளியிலே கலகம் ஓய்ந்துவிட்டதாகத் தெரிந்தது. தீயும் அணைந்துவிட்டது. அழகி, ''வெளியே போகலாமா?'' என்று கேட்டாள். அதற்கு நான், ''இந்த வகுப்பறைகள் சில, தொண்டர் படையின் பொறுப்பிலேதான் விடப்பட்டிருக்கின்றன; அதனுல் இங்கேயே இரவைக் கழித்துவிட்டு காலையில் போகலாம்'' என்று நான் சொன்னேன். அவளும் சம்மதித்தாள். கதவை சரியாகத் தாளிட்டுவிட்டு நான் அவளோடு பேச்சுக்கொடுக்க ஆரம்பித்தேன். அவளது நடிப்பை அவளுக்கு நேராகவே புகழ எனக்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டது. ''அசல் நூர்ஜஹான் போலவே இருக்கிருய்'' என்றேன்.

''அப்படியா?'' என்று அவள் புன்னகை புரிந்தாள். ஒருவருக்கொருவர் வேடிக்கையாகப் பேசிக்கொண்டேயிருந்தோம்.

''நூர்ஜஹான் வேடத்திற்காகவே நீ பிறந்திருக்கிருய்!'' என்றேன்.

அதற்கு அவள், ''ஏது! என்னை நீ புகழ்வதைப் பார்த்தால், நீ ஜஹாங்கீராகப் பிறந்திருக்கக் கூடாதா என்று ஏங்குவாய் போலிருக்கிறதே!'' என்று குறும்பு பேசினுள்.

''நிச்சயமாக அப்படித்தான் நினைக்கிறேன்'' என்றேன் நான்! அவளுக்கும் எனக்கும் அந்த ஒரு இரவிலே, ஒரு சில மணி நேரங்களிலே நல்ல நட்பு ஏற்பட்டுவிட்டது.

அவள் கேட்டாள்; அதை இப்போது நினைத்தாலும் எனக்கு வெட்கமாக இருக்கிறது: ''நான் ஜகாங்கீராகவும், நீ நூர்ஜஹானுகவும்இருந்தால் எப்படியிருக்கும்?'' என்று!

''நான் அவ்வளவு அழகா?'' என்றேன் நாணத்தோடு!

''ஆமாம்!'' என்று தலையசைத்தாள் அவள். பிறகு இருவரும் இரண்டு பலகைகளிலே படுத்து உறங்க ஆரம்பித்தோம்.

★

விடியற்காலை! சேவலின் குரல் கேட்டு விழித்தேன். நூர்ஜஹான் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளை எழுப்புவதற்காகப் போனேன். நல்ல தூக்கம் அவளுக்கு! வேடிக்கை செய்யவேண்டும் போலிருந்தது எனக்கு! அவளது நீண்ட ஜடையை பலகையின் காலிலே முடிந்துவிட்டு. தூரத்தில் உட்கார்ந்து கொண்டு அவளை எழுப்பினேன். அவள் எழுவாள்; ஜடை.தடை செய்யும்; சிரிக்கலாம் — என்று எதிர்பார்த்தேன். எழுப்பினேன். எழுந்தாள். ஜடை தடை செய்யவில்லை! ஆனுல், ஜடைக்கும் அவள் தலைக்கும் சம்பந்தமில்லையென்பது தெரிந்தது. அழகான சுருள் கிராப்போடு நூர்ஜஹான் எழுந்தாள். நூர்ஜஹான் வேஷம் போட்டது நடிகை அல்ல; நடிகர்! ஆம்; என் உள்ளமெனும் நாடக சாலையிலே என்றென்றும் கூத்தாடும் நடிகர்! என் அழகு துரை!

முதலில் கோபித்தேன்—ஆனுல் என்ன காரணமோ; அந்தக் கோபம் நீடிக்கவில்லை. பெண் வேட துரையிடம் உள்ளத்தைப் பறிகொடுத்தேன்—உறவாடினேன்—ஆண் என்று தெரிந்தபிறகு. அந்த உறவை ஒடித்துக்கொள்ள இயலாமலே போய்விட்டது. அந்த ஒருநாள் விநோத சந்திப்பு—தினம் தினம் தித்திக்கும் சந்திப்புகளாயிற்று!

துரை, என்னுடையவரானுர்! நான் அவருடையவளானேன்!

இதைத்தான் பரிமளா, கிழவரிடம் பதிலாக சொல்லியிருக்க வேண்டும். ஆனுல் சொல்லவில்லை! எப்படிச் சொல்வாள்? அதனுல் மௌனமாக இருந்தாள். இருவரும் மனோரா பக்கம் வந்து விட்டார்கள். கிழவர், துரையைப் பற்றிய செய்திஅறியத் துடித்தார். மனோராவின் அருகாமையிலே சென்றுர். அங்கே ஏழெட்டு மனிதர்கள் பூமியிலே உருண்டுகொண்டிருப்பதை இருவரும் கண்டார்கள். கிழவர் ஓடிப்போய் கவனித்தார். அனைவரும் துரையின் நண்பர்கள்தான்! கைகால்கள் கட்டப்பட்டு கீழே உருட்டி விடப்பட்டிருந்தார்கள். கிழவர் திகைத்தார்!—''துரை எங்கே?'' என அலறினுர்—யாரும் பதில் சொல்லவில்லை!—அவர்கள் வாய்களும் கட்டப்பட்டிருந்தன.

[ வளரும்]

இவ் வாரம் இடம் பெற இருந்த சக்கரவர்த்தியின் திருமகன், குறளோவியம், மகா பாரதம் – ஆகியவை இடமின்மை காரணமாக, இந்த இதழில் வெளிவரவில்லை. அடுத்த இதழில் நிச்சயம் வெளிவருகிறது.

# விம்முகிருர்கள்!

கோவா கொடுமையைக் கண்டிக்கு முகத்தான் 18-8-55 அன்று சென்னையிலே சர்வ கட்சிகளும் சேர்ந்த கண்டனக் கூட்டமும், கண்டன ஊர்வலமும் நடைபெற்றது.

ஊர்வலத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் முதலிடம் வகித்தது. இரண்டாம் இடம் காங்கிரஸ் கட்சிக்கும், மூன்ரும் இடம் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அளிக்கலாம் என்ற விதத்திலே கண்டன நாள் அமைந்திருந்தது. எங்கு நோக்கினும் தி மு. கழகக் கொடிகள் தாங்கிய காளையர் ஊர்வலத்திலே அணிவகுத்தனர். ஊர்வலப் படங்களை வெளியிட்டிருக்கும் தேசீய ஏடுகள், கழகப் பெயரை மறைக்க முயன்றும் கூட நமது கொடிகளை மறைத்திட முடியவில்லை என்பது அந்தப் படங்களை உற்று நோக்கினுலே விளங்கும்.

ஊர்வல முடிவில் ஹைகோர்ட் கடற்கரையில் காங்கிரஸ் பிரமுகர் அண்ணுமலை பிள்ளை தலைமையில் கண்டனக் கூட்டம் துவங்கியது. கூட்டம் நடைபெறும் மேடையின் முகப்பிலே கம்யூனிஸ்டு கொடி பறக்கவிடப் பட்டது. தி.மு. கழகத் தோழர்கள் தங்களிடமிருந்த கொடிகளை கடற்கரை மணலிலே சொருகி ஆங்காங்கு பறக்கவிட்டனர். அது போல சில கம்யூனிஸ்டு கொடிகளும் பறந்தன. கழகத்தின் கொடிகள் கண்ணைப் பறிக்கும் விதத்திலே ஏராளமாகப் பறப்பது கண்ட தோழர் ஜீவானந்தம் மனம் புழுங்கி, ''இது சர்வ கட்சிக் கூட்டம். இதுபோல கழகக் கொடிகளை நட்டு வைக்கக் கூடாது!'' என மேடையிலிருந்து கூவினுர். உடனே பொதுமக்கள், ''கம்யூனிஸ்டு கொடி மட்டும் மேடை உச்சியிலே பறக்கலாமா?'' என்று கேட்டனர். ஜீவானந்தமோ, ''இது நாங்களும் காங்கிரசாரும் ஏற்பாடு செய்த மேடை!'' என்று அழுத்தமாகப் பதிலளித்தார். ''இங்கே, கழகத்து துணைச் செயலாளர் என். வி என். அவர்களும் பேசுகிருர். ஆகையால் எல்லாக் கொடிகளும் இருக்க வேண்டும்'' என்று மக்கள் மன்றம் தீர்ப்பு அளித்தது. உடனே. ஒரு தி மு கழகக் கொடி மேடை மீது பறக்க விடப்பட்டது அதையொட்டி, காங்கிரஸ், தமிழரசு கழகக் கொடிகளும் மேடையிலே பறக்கவிடப்படுவதற்கான ஆர்வம் காட்டப்பட்டது. ஒருவருக்கொருவர் போட்டி போட்டு அவரவர் கொடிகளை மேடையிலே பறக்கவிட முனைந்ததால், மேடை சாய்ந்திடும் நிலைமை ஏற்பட்டது. இவ்வளவுக்கும் காரணம்; தோழர் ஜீவானந்தம் அவர்களுக்கு ஏற்பட்ட ஆத்திரந்தான்! எப்போதுமே, சர்வ கட்சிக் கூட்டங்களிலே தி. மு. கழகத்திற்குக் கிடைக்கும் மதிப்பை அவரால் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை. அதன் காரணமாக இதுபோன்ற சிறிய தவறுகளை விதைத்து விடுகிருர்.

சாய்ந்த மேடை சரிப்படுத்தப்பட்டதும் காங்கிரஸ் நண்பர்கள் செங்கல்வராயன், டாக்டர் வரதராசலு நாயுடு, ஆகியோரும், கம்யூனிஸ்டு தோழர்கள் ராமமூர்த்தி, ஜீவானந்தம் ஆகியோரும், திராவிட பார்லிமெண்டரி கட்சித் தலைவர் சுயம்பிரகாசம் அவர்களும், அந்தோணி பிள்ளை அவர்களும், தி. மு. கழகத் துணைச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் கோவா கொடுமையைக் கண்டித்துப் பேசினுர்கள்.

அங்கேகூட ஜீவானந்தம், ''கோவாவிலே சிந்தப்படுவது வடக்கு ரத்தமோ, தெற்கு ரத்தமோ இல்லை—அசல் இந்திய ரத்தம்!'' என்று குறும்பாகக் குறிப்பிட்டார்.

சர்வ கட்சிக் கூட்டமென்று அழைத்தால் நாமே வராமலிருந்து விடுவோம்—அப்படி வராவிட்டால் வசைபாடலாமென ஜீவானந்தம் போன்றவர்கள் கருதுகிருர்கள். நாமோ பிரச்சினையின் தன்மையறிந்து இதுபோன்ற கூட்டங்களில் கலந்து கொள்கிறோம் அது அவர்களுக்கு வெளியிட முடியாத வேதனையாக இருக்கிறது! விம்முகிருர்கள்; பாவம்; என்ன செய்வது!

## வேலை முடிந்துவிட்டது . . .

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

மூன்றாவது முறை அவள் கர்ப்பவதியானதற்குரிய குறுக்கு வழிக் காரணம் இததான். உடல் ஆசையல்ல — தசை வெறியல்ல. ஆனால் அவளது உடம்பு இரத்தத்தாலும், பச்சை மாமிசங்களாலும் அமைக்கப்பட்டது. மீண்டும் அவள் கர்ப்பவதியாகத்தான் வேண்டும்! இயற்கை ஆணை பிறப்பித்தது.

மூன்றாவது குழந்தையை இடுப்பிலேந்தி, இரண்டாவது குழந்தையைக் கையிலே பிடித்து, முதல் குழந்தை பின்னே நடக்க, இவள் முன் நடந்தாள், பிச்சைப் பாத்திரமேந்தியவளாய்!

மூத்த குழந்தைக்குப் பிச்சையெடுப்பதிலே நல்ல நோக்கமிருந்தது. அவனது உருண்டை விழிகள் தின்பதற்குரிய பொருள்கள் எங்கிருந்தாலும், துருவும்—துளைத்துப் பாயும். அவன் கைவைக்கிற இடத்தில் ஆகாரம் உண்டு. ஆனால் இளைய குழந்தைக்குக் கொடுப்பதில்லை. அவன் கைகள் எப்போதும் நிரம்பி வாய் அசைந்து கொண்டேயிருக்கும். இளைய குழந்தை அதைப் பார்த்து அழும். தாய் மூத்த குழந்தையைத் திட்டுவாள்.

"குடிகெடுக்க வந்தவனே, உனது கூடப் பிறந்தவனல்லவா?"

வாய் நிறைந்திருப்பதால் அவனுக்குப் பதில் சொல்ல வாய்ப்பில்லை!

பல வேளைகளிலும் அவன் தாயோடு இருப்பதில்லை. சமயம் பார்த்து ஓடிவந்து சேர்ந்து கொள்வான். எதற்காக? அவளிடமிருந்தும் கிடைக்கும் பங்கிற்காக.

★

நீங்கள் அவளைக் குற்றவாளிக் கூண்டிலேற்றி சவுக்காலடியுங்கள். கவலையில்லை. அவள் நான்காவது முறையும் கர்ப்பிணியானாள்!

எந்தச் சூழ்நிலையில்? எப்படி?— இவைகள் பயனற்ற கேள்விகள்.

அவளே சுமந்தாள்! வேதனையைச் சுவைத்து அவளே பெற்றாள்! அவளது மார்பைச் சுவைத்து அந்தக் குழந்தை வளருகிறது. உங்களுக்கு—மனித உலகிற்கு அவள் ஒரு அன்பளிப்பு தந்தாள்! எதற்கென்று கேட்கிறீர்கள்?

அவள் குழந்தை பிறப்பிக்க வேண்டும் என்று இயற்கை ஆணை இடுவானேன்?

★

அந்த கடைத் திண்ணையில் நான்கு குழந்தைகளும் தன்னை மறந்து நித்திரையிலே ஆழ்ந்ததற்குப் பிறகு, சுற்றுச் சார்பு அமைதியை அரசோச்ச விட்ட தன் பிறவு, அவள் பக்கமாக சந்தடியின்றி நகர்ந்து வந்த அந்த மனிதனோடு எதையெல்லாம் அவள் சொல்லியிருப்பாள்?

"அய்யோ வேண்டாம்! கூடவே கூடாது" என்று அதிர்ந்து கூறியிருக்க மாட்டாளா?

"இனியும் என்னால் முடியாது" என்று நடுங்கி, தனது கண்களிலே அச்சத்தை மோத விட்டிருக்க மாட்டாளா? தனது இயலாமையை அவனது காலடியில் காணிக்கை வைத்து, விடுதலை வேண்டியிருக்க மாட்டாளா?

மிருக உணர்ச்சியின் சாட்சாத்தூதுவதனாக—இல்லை; இருப்பிடமாக மாறிவிட்ட மனிதனுக்கு அந்த அபலையின் இதயத்தை அரித்தறுத்தோடி வரும் வார்த்தைகள் எங்கே அர்த்தமாகப் போகின்றன! எப்படியோ— இரண்டு, அல்லது, நான்கு அணுக்கள் கைமாறியிருக்கலாம். அந்த கைமாற்றத்திலே ஏற்பட்ட சம்பவத்தில் எதிர்காலத்தைப் பற்றி ஒரு திட்டமும் இல்லாமலிருந்ததா? இல்லாமலிருந்திருக்கலாம்.

பிச்சைக்காரனானாலும் அவன் மனிதன்! தசைக்கு, தசையோடிணைந்து ஒன்றாவதற்கு ஒரு ஆசையுண்டு. அது துள்ளிக் குதித்தது!

இரண்டு குழந்தைகள் பின்னால். ஒன்றைக் கையிலே பிடித்துக் கொண்டாள். நாலாவது குழந்தை இடுப்பில் — இப்படியாக அந்த பிச்சைக்காரக் குடும்பம் பவனி வந்தது; நாயகனின்றி!

எங்கிருந்தாவது கொஞ்சம் சோறும், நீரும் கிடைக்கும். நீரை மட்டும் தான் குடித்துவிட்டு, குழந்தைகளுக்கு சோறு தரலாம் என்ற நினைவில் அந்த சட்டியிலே தனது உதட்டை அழுத்துவாள். அவ்வளவுதான்; குழந்தைகளின் புரட்சிக் கரங்கள் குறுக்கிடும்; அந்தச் சோறும் நீரும் கீழே கொட்டிவிடும். அய்யோ; அவள் என்ன செய்யக்கூடும்!

இனியும் அவள் குழந்தை பெறுவாளா? என்னவோ? சந்தேகந்தான். சதைப் பற்றில்லை. வெறும் எலும்புக் கூடு! அந்த நிலையில் கடினம்தான். என்றாலும் உறுதி கூறுவதற்கில்லை.

★

நடு நிசி! பேய்க் காற்று. கோரமான மழையும்கூட. மூன்றாவது குழந்தை வாந்தியெடுத்தது. பேதியும் ஆரம்பமாயிற்று. என்ன ஏற்படும் என்று தெரியாது. இரண்டாவது குழந்தை மட்டும் எழுந்து உட்கார்ந்து கொண்டு கேட்டது.

"அம்மா, ராமனுக்கு உடம்புக்கு என்ன?" — ராமனை அவன் வருடினான். வாந்தி நின்றது— அவன் கேட்டான்:

"ஏன் அம்மா, ராமன் பேசாமலிருக்கிறான்? ஏன் வாந்தி நின்றுவிட்டது?"

தாய் ராமனைக் கட்டிக்கொண்டு 'கோ'வென்று கதறுகிறாள். பொழுது புலரும்வரை இரண்டாவது பையன் தூங்கவேயில்லை. அவனது தம்பி செத்து மடிந்து மரத்துப் போய்க் கிடப்பதைக் கண்டான். இளைய குழந்தையை—இரண்டாவதாகப் பெற்ற குழந்தை— கடைசியாக முத்தமிட்டுவிட்டு நடந்துவிட்டாள். இளைய குழந்தை, செத்துக் கிடந்த குழந்தையைக்காட்டி, அதனது மொழியில் ஏதோ பேசிற்று. ஒருவேளை 'ஏன் என் அண்ணனை கைப்பிடித்துக் கொண்டு வரவில்லை?' என்று கேட்டிருக்கலாம்!

அவர்கள் ஐந்து பேரும் ஒன்றாக யிருந்தார்கள், இன்று வரை. அந்தப் பவனி நான்கு பேராகக் குறைந்தது! மூத்தக் குழந்தை அவனது ஆகாரம் தேடிப் போவான். மாலை திரும்புவான். "ஏதாவது கிடைத்ததா?"—தாய் கேட்பாள். கிடைப்பது அவனுக்கே போதாதே! ஆனால் தாய் அவனுக்கு ஏதாவது வைத்துக் காத்திருப்பாள். அதைப் பெறுவதற்குத் தான் அவன் வருவான். பிறகு அங்கே படுத்தாலும் உண்டு— உடனே போனாலும் போவான். இரவு அவன் போய்விட்டால் தாய் தூங்கமாட்டாள். அவனது பின்னால் அவளது மனமும் அலைந்து கொண்டிருக்கலாம்.

ஒருநாள் அவன் திரும்பவில்லை. மறு நாளும் அப்படியே. அடுத்த நாளும் காணோம். இரண்டாவது குழந்தை கேட்க ஆரம்பித்தது.

"அண்ணன் எங்கே அம்மா?"

அவள் பிறகு கொஞ்சநாளைக்கு பிச்சை எடுக்கவேயில்லை. அந்த நகர்ப் புறம் முழுமையும் சுற்றி நடந்தாள். ஹோட்டலின் பின்னால், சந்து பொந்துகள், சாலையோரங்கள், சாக்கடைப் பக்கம், குப்பைக் கூட்டி வைத்திருக்கும் இடங்கள் எங்கும் தேடினாள். பலரிடமும் கேட்டாள். நான்கு குழந்தைகள் எங்காவது விளையாடிக்கொண்டு நின்றால் அங்கே பறப்பாள்.

அவளுக்கு ஒரு சேதி வந்தால் போதும்; "அவன் உயிரோடிருக்கிறான்" என்ற சேதிதான் அது. தூங்கப் போகும்போது, இரண்டாவது குழந்தை சொல்லும்:

"அம்மா! அண்ணன் இன்று நிச்சயமாக வருவான்; ஏதாவது அவனுக்குக் கொஞ்சம் வைச்சுக்கோ"

எத்தனை நாளாக அந்தப் பிச்சைப் பாத்திரத்தில் அவனுக்குரிய பங்கை, வைத்துக் காப்பாற்றுவது!

ஒரு நாள் திடீரென்று தூக்கத்திலிருந்து விழித்தாள், "மகனே" என்று உரக்கக் கூவிக்கொண்டே! அவன் அவளை அழைத்ததாக அவளுக்கு ஞாபகம், பிரமை.

அவன் இறந்திருக்க வேண்டும் என்று அவளுக்குப் பட்டது. அவனது குரலை அவள் தெளிவாகக் கேட்டாள். விழித்தபோது அவனில்லை. "அம்மா! அம்மா!" என்று ஆசையுடன் அழைப்பானே, அந்த நினைப்புகள்தான் வாட்டுகிறதா?

ஒரு வேளை பறக்கக் கற்றுக் கொண்ட அந்த பறவைக் குஞ்சு, பறந்து வான வீதியிலே மறைந்து விட்டிருக்கலாம்!

அந்த இரண்டாவது குழந்தைக்குக் கொஞ்ச நாளாக ஒரு புத்தி தோன்றியிருக்கிறது. அவன் தனியாகப் போனால் ஏதாவது கிடைக்கும். மீதியைத் தாய்க்கும் தருவான். அவன் ஒரு பாட்டும் படித்திருக்கிறான்,

"அம்மா பசிக்குதே!
தாயே பசிக்குதே!"

தளர்ந்து தகர்ந்து போன, தாய் ஒரு மூலையில் உட்கார்ந்து விட்டாள். இப்பொழுது அவளது குழந்தை பிச்சையெடுத்து அவளுக்கு உணவு தருகிறான்.

ஒரே குழந்தைக்கு மட்டும் அவள் தாயாக இருந்திருந்தால், இது அவளுக்குக் கிடைத்திருக்குமா?

அவன் பகலிலும், மாலையிலும் வருவான். அந்தப் பாட்டை அவன் பாடிப் போனால் யாரும் பிச்சை தருகிறார்கள். அவனுக்கு நல்ல குரல்! நல்ல அபிநயமுமிருக்கிறது! அவன் பிச்சை எடுப்பதற்காகவே பிறந்தவன்தான்.

தாய்க்குத் தந்து அவனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. ஒரு நாள் பகல் அவன் வரவில்லை. மாலை வரை தாய் காத்திருந்தாள்! கடைசியாக அவனைத் தேடிப் புறப்பட்டாள்.

ஓர் மூலையில், காரிலே சிக்கி, மார்பு தரையோடு தரையாகச் சேர்ந்து 'சாந்தா'க்கப்பட்டு அவன் கிடந்தான். அவன் பிச்சையெடுத்துத் திரட்டி வைத்திருந்ததெல்லாம்—தாய்க்கும், குழந்தைகளுக்குமுள்ள உணவு—சிந்திச் சிதறி ரோடு முழுமையும் பரவிக் கிடந்தது.

★

இப்போதவள் தனிமையாக நிற்கிறாள்! நான்காவது குழந்தை ஒருவேளை மாண்டிருக்கலாம்! அல்லது, அது தன் வழியே புறப்பட்டிருக்கலாம். அல்லது மூன்று குழந்தைகளும் போய்விட்டதற்குப் பிறகு அதை அவளே ஒதுக்கித் தள்ளியிருக்கலாம். எத்தனை நாளாக, ஒருவித பலனுமின்றி அவள் சுமந்து திரிகிறாள்!

பிறகு அவள் ஊன்றுகோலின் துணை கொண்டு நடப்பது தெரிந்தது!

★

நகரத்தினின்றும் புறப்படும் ஒரு ராஜபாட்டை. நகரத்தின் எல்லை தாண்டி, வந்தடையும் கிராமப் பகுதி. ஊர்ந்தும், இழைந்தும் அவள் வழி நடக்கிறாள். கையில் ஊன்றுகோலும், சின்ன ஒரு மூட்டையும்! அந்த மூட்டை அவளது கையை விட்டு அகலாமல் நகருகிறாள்.

எதற்காக, எங்கே, இவ்வளவு சிரமப்பட்டு ஊர்ந்துகொண்டிருக்கிறாள்? இனியும் சென்றடைய வேண்டிய இலட்சியபுரி நோக்கியா? இருக்கலாம்! ஒவ்வொரு மனிதனும் சென்றடைய வேண்டிய இடம் நிச்சயிக்கப்பட்டிருக்கலாம்! அது எங்கே? நிச்சயமாக சொல்வதற்கில்லை. ஆனால் அதுவரை சென்று தீரவேண்டியதுதான். அவள் தனது இறுதி இடத்திற்கு இன்னும் வந்து சேரவில்லை!

ஒரு வேளை அவள் நகராமலிருந்தால், கொஞ்ச நேரங்கூட அவளது வாழ்வு நீண்டுவிடலாம்! அது கூடாதே! பொழுதும் நிச்சயிக்கப்பட்டதாயிற்றே! அதற்குள்ளாக, ஜீவ சக்தி—உயிரோட்டம் குன்றியாக வேண்டும். அதற்காக வேண்டியும்கூட அவள் நகர்வதாயிருக்கலாம்!

வழி நடப்போர் பார்த்துவிட்டுச் சென்று விட்டார்கள்! அவர்களுக்கு நிற்பதற்கு நேரமில்லை. அவர்களும் தங்கள் தங்கள் இடம் சென்று சேர வேண்டுமல்லவா?

மார்பிலே காணும் அந்த வடு! நான்கு குழந்தைகள் சுவைத்த அவளது மார்பு, இடுப்பில் குழந்தையைத் தூக்கிய தழும்புகள்! சிருஷ்டிகர்த்தா—எவனாயினும் அவளுக்குப்பதில் சொல்ல வேண்டியதில்லை! அவள் பெண்ணாகப் பிறந்தாள் — செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து முடித்துவிட்டாள்! கொஞ்சதூரம் நகர்ந்து சென்றுவிட்டு திரும்பிப் பார்க்கிறாள். யாரைப் பார்க்கிறாளோ— என்னவோ? அல்லது தனது வாழ்க்கையைத்தான் திரும்பிப் பார்க்கிறாளா?

இத்தனை ஆண்டுகள் வாழ்ந்த ஒருவளுக்கு வாழ்க்கையைப்பற்றி சொல்லுவதற்கு சில சேதிகளிருக்கலாம். ஆனால் அந்த சேதியைத் தந்து செல்ல அவளுக்கு ஆளில்லை.

ஒரு மர நிழலில் வந்து சேர்ந்தாள். புடைத்தெழுந்து வளைந்து நின்ற வேரில் தலையை மெதுவாகச் சாய்த்து தனது வாழ்வை இறுதியாக்கிக் கொண்டாள்.

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

Best copy available




# சென்சார்-1.

மத்திய சர்க்காரின் சென்சார் போர்டின் சென்னைக் கிளையிலே யுள்ளவர்கள் தங்களின் கத்தரிக்கோலைக் கூர்மையாகத் தீட்டிக்கொண்டு அறிவு பரப்பும் படங்களை அழித்திட முனைந்து விட்டார்கள் என்பதற்கு ஆயிர மாயிரம் சான்றுகள் காட்ட முடியும் நம்மால்!

அறிவியக்கத் தோழர்கள் தீட்டும் திரைச் சித்திரங்கள் மக்களிடையே மறுமலர்ச்சியைத் தோற்றுவித்திடப் பெரிதும் பயன்படுகின்றன. அப்படிப் பயன்படுவதால் புதியதோர் சமுதாயம் உருவாகலாம். அப்படி உருவாகும் உண்மைச் சமுதாயத்தில் உழைக்காமல் வாழ சட்டம் வகுத்திருப்போருக்கும் இடமில்லாமற் போய் விடும்—என அஞ்சிடும் பிற்போக்கு மனம் படைத்தோர், ஆட்சிச் சக்கரத்தை இயக்கி வருகிறார்கள் என்பது நாடறிந்த சேதிதான்.

அதன் காரணமாகவே அறிவியக்கத் தோழர்களுக்கு கலைத்துறையில் இடமில்லாமல் செய்துவிட முடிவு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். பச்சையாக, இப்பெயர் கொண்டோர் திரையுலகில் இருத்தலாகாது என்று சொல்வதற்குப் பதிலாக, அத்தகைய வெறுப்புக்கு ஆளானவர்கள் சம்பந்தப்பட்ட படங்களிலே தங்கள் கைவரிசையைக் காட்டத் துவங்கியிருக்கிறார்கள்; சென்சார் போர்டு மூலம்! லட்சக்கணக்கில் பணம் செலவழித்து படம் எடுக்கும் பட உரிமையாளர்கள் அறிவியக்கத் தோழர்களை வைத்து திரைப் படம் தயாரிக்கப் பயப்படும் விதத்திலே தங்கள் கத்தரிக்கோல் பிரயோகத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். சென்சார் என்பது, படத்திலே வரும் ஆபாசக் கட்டங்களையும் காணத் தகாத காட்சிகளையும் ஆட்சேபிப்பதற்காகவே அமைக்கப்பட்டதாகும். ஆனால் இங்குள்ள சென்சாரோ, அறிவு வாடைக்குத் தடை போடும் அம்மாஞ்சித் தன்மையிலே நடை போட்டு வருகிறது. வேண்டுமென்றே இந்தச் செயல் நடைபெறுகிறது என்பதற்கு இந்த வாரம் இரண்டொரு உதாரணங்கள் மட்டும் தருகிறோம்.

அண்மையில் வெளியான விப்ரநாராயணா என்ற படத்தில் விப்ரநாராயணரின் ஆஸ்ரமம்; அங்கே விஷ்ணுவின் விக்ரகம். விப்ரநாராயணரைத் தன் விழிக்கு அடிமையாக்க தாசியொருத்தி வருகிறாள். பல நாள் முயற்சிக்குப் பலனும் கிடைக்கிறது. விப்ரநாராயணர் நினைவு தடுமாறுகிறார். காமச் சூறாவளியில் சிக்குகிறார். அவளைத் தழுவுகிறார். இருவரும் பின்னிக் கொள்கிறார்கள். எங்கே? ஆஸ்ரமத்திலே—விஷ்ணு விக்ரகத்துக்கு நேரே, அதிலும் 'ஜாக்கெட்' போடாத அந்த ஜாலக்காரியோடு கொஞ்சி அணைக்கிறார் அந்த அவதார புருஷர். அவள், அவரை அணைத்துக்கொண்டே, "உஸ்! பெருமாள் இருக்கிறார்!" என்று விஷ்ணு சிலையைக் காட்டிச் சொல்லிக் கொண்டே, ஒரு திரையை எடுத்து விட்டு மறைக்கிறாள். திரைக்குள்ளேயிருந்து பக்தரும், பாவையும் அவிழ்த்து எறியும் ஆடைகள் வெளியே வந்து விழுகின்றன. விப்ரநாராயணரும், தாசியும் வீணையும் நாதமுமாகிறார்கள். விஷ்ணு எதிரே இருக்கிறார்; இடையிலே திரை!

இந்தக் காட்சி சென்சாருக்குத் தப்பி வெளி வந்திருக்கிறது. 'ஆகா, பக்தி ரசம்! பக்தி ரசம்!' என்று பாராட்டியிருக்கிறது சென்சார் போர்டு!

ஆனால் இதே சென்சார் போர்டு, தெலுங்கு பராசக்தியிலே மட்டும் தீப்பொறி பறக்கும் கண்களோடு தடை வீசுகிறது!

பராசக்தி கோயிலிலே, ஒரு பெண்ணை ஒரு கொடிய பூசாரி கற்பழிக்க முயலுகிறான். அவளும் மணி அடிக்கும் பையன் உதவியால் தப்புகிறாள். அது மட்டுமல்ல; அந்தக் கொடிய பூசாரிக்கு, அவளது அண்ணனால் தண்டனையும் கரப்படுகிறது. இந்தக் காட்சி அறவே கூடாதாம்!

விரக தாபத்தின் எல்லை வரையிலே சென்று, ஆண்டவனுக்கு நேராக ஆடை அவிழ்க்கும் கட்டம் வரையிலும் காட்டலாமாம்!

காளி கோயிலில் கற்பழிக்க முயன்ற காதகனைக் காட்டக் கூடாதாம்!




## ராஜராஜ சோழன்

'காதல்' ஆசிரியர் அரு. ராமநாதன் எழுதி டி. கே. எஸ். சகோதரர்களால் நடிக்கப்படும் உயர்ந்த சரித்திர நாடகமாம் 'ராஜராஜ சோழனை' வெள்ளி வீதியிலே பவனி வரச் செய்யப் போகிறார்களாம், எஸ். கே. பிக்சர்சார்! இதன் டைரக்ஷன் பொறுப்பை கிருஷ்ணன்-பஞ்சு ஏற்றிருக்கிறார்கள்.

★

## பெற்ற மனம்

டாக்டர் மு. வரதராசனாரின் ஓவியமிது. நேஷனல் பிக்சர்சாரின் பொறுப்பிலே தயாராகி, இடையிலே துவண்டிருந்த 'பெற்றமனம்' புத்துயிர் பெற்று வெளிவரும் என்று தெரிகிறது. இதில் சிவாஜி கணேசன், இலட்சிய நடிகர் ராஜேந்திரன் முதலியோர் நடிக்கிறார்கள்.

★

## ராஜா ராணி

சிவாஜி கணேசன், எஸ். எஸ். ராஜேந்திரன், பத்மினி, ராஜசுலோசனா முதலியோர் நடிக்கும் இந்தப் படம் அக்டோபர் இறுதியில் வெளிவருமென எதிர்பார்க்கப் படுகிறது. இதன் டைரக்ஷன் பொறுப்பை பீம்சிங் ஏற்றுள்ளார்.

★

## கமால் புரொடக்ஷன்ஸ்

திரையுலகில் புதிதாக பிரவேசித்திருக்கும் தோழர் கமால் எனும் கலை ஆர்வம் படைத்த நணபர், டைரக்டர்கள் கிருஷ்ணன்-பஞ்சுவை வைத்து, அரியதோர் படத்தை தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார். இதன் கதை வசனங்கள் கருணாநிதியினுடையது.

★

## மர்க்குரி

தோழர் ஆசைத்தம்பி எழுதியுள்ள இப்படத்தின் வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. தோழர் காசிலிங்கம் இந்தப் படத்தை டைரக்ட் செய்து வருகிறார். இதில் சிவாஜி கணேசன், ஜி. வரலட்சுமி முக்கிய பாக மேற்றுள்ளனர்.

★

---

*என்னே ஓரவஞ்சனை! என்னே ஒருதலைப் பட்சமான தீர்ப்பு! இந்த அநியாயத் தீரப்புக்கு முடிவே கிடையாதா?*

*[தொடரும்]*

## சிறகிழந்தார் சென்னை....

பிச்சைப் பாத்திரத்துடன் காமராசர் டெல்லிக்குச் சென்றார்! வடக்கத்தியர் கோட்டையின் வாயிற்புரத்திலே கூப்பாடு போட்டார்! பாரீர், எங்கள் தென்னகத்தை! பால் அருந்தாப் பாலகன்; பாதையிலே உறங்கும் பிரஜைகள்; பார்வையில்லாதவன் போல் வளம்தேடி தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கும் தமிழர்; வீடற்றோன்; வேலையற்றோன்; விழியிலே நீரை உரிமையாக்கிக் கொண்டோன்-எண்ணற்றோர்! எண்ணற்றோர்!-இப்படியெல்லாம் கூப்பாடு போட்டு 'பட்டியல் பெருகுகிறது துரைகளே-பட்டினிப் பட்டாளமும் உருவாகிறது' என்றார்!

"இரும்பு கிடைக்கிறது; தங்கம் இருக்கிறது-தயக்கம் ஏனோ தரும தாதாக்களே!" என்று கண்ணீர் வடித்தார்.

அய்யோ! அவர் முகத்திலே கரிபூசி அனுப்பிவிட்டார்கள் மேட்டு நிலத்திலே வாழும் சேட்டுக் கனவான்கள்!

நிலம் தோண்டுவார்கள்; வளம் தேடுவார்கள் என எண்ணினோம்—ஏமாற்றிவிட்டார்கள்!

நானூறு கோடியிலிருந்து 200 கோடி ரூபாய்—இதற்கு இடையிலே உள்ள தொகை ஏக இந்திய அமைப்புக்காக நாம் சிந்தியிருக்கும் கண்ணீர்த் துளிகள்!

பசி; பட்டினி; பஞ்சம்; வேலையில்லாக் கொடுமை—இடையிலே உள்ள ரூபாய்கள் இதைத்தான் பேசுகின்றன!

அடலேறு போலச் சென்ற காமராசர் பட்டாளம் அடங்கி ஒடுங்கித் திரும்புகிறது! நீதியிருக்கிறது; நேர்மை யிருக்கிறது எங்கள் பக்கம்—என்றெல்லாம் முழங்கினார்கள், அங்கே! நம்முடைய மாநிலத்து மக்கட் தொகையைக் கணக்கு காட்டி அதற்கேற்றத் தொகையையாவது தாருங்கள் — என்று தாள் பணிந்து கேட்டார்கள்! — அந்தக் கேளாக் காதினருக்கு ஏறவில்லை!

நானூறு கோடி ரூபாய் என்று ரத்தினம் போல் ஜொலிக்கும் கொண்டையுடன் — ஜனத் தொகை ஆதாரம் என்னும் அழகுதமிழும் சிறகுகளுடன் சண்டைக்குச் செல்லும் சேவற் கோழியைப் போலத்தான் சொகுசோடு காமராசர் டெல்லிக்குச் சென்றார்!

அய்யகோ! கொண்டையும், சிறகும் பறிகொடுத்து விட்டார்! பிய்த்தெடுத்து விட்டார்கள் வடநாட்டு ஏகாதிபத்யப் பித்தர்கள்! 200 கோடியே போதும்; தலை தப்பியதே என்று கூக்குரல் எழுப்பி சென்னைக்குத் தப்பி வந்துவிட்டார், காமராசர்!

வெட்கம்! வெட்கம்!! குற்றாலத்துத் தீர்மானத்தை டெல்லி முனிசிபாலிடியின் குப்பைத் தொட்டியிலே கிழித்துப் போட்டுவிட்டுத் திரும்பியிருக்கிறார், காமராசர்!

வேதனை! வேதனை!! முதலில் நானூறு கோடி ரூபாய்தானா—என்று நினைத்தோம் — அய்யய்யோ! அதுவும் இல்லையாமே!

—மாறன் எம், ஏ.,

## கொள்கை வளருது கோபுரம் போலே!

### அக்கரை வட்டம்

21—8—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு, காளியம்மன் கோவில் திடலில், தோழர் நா. இராமசாமி அவர்கள் தலைமையில், தோழர்கள் டி. கே. சீனிவாசன், என். கிட்டப்பா, கே. எஸ். சௌந்திரராசன்—ஆகியோர் பேசுவர்.

★

### நாட்டூர் (சேலம் மாவட்டம்)

23-8-55 ஞாயிறு மாலை 6—மணிக்கு, தோழர் கே. ஆர். ரெங்கன் அவர்கள் தலைமையில், தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், ஈ. ஆர். கிருஷ்ணன்—ஆகியோர் பேசுவர்.

★

### குன்னத்தூர்

—9—55 வியாழன் மாலை 7 மணிக்கு, தேர்த் திடலில் குன்னத்தூர் தி. மு. க. நான்காம் ஆண்டு விழா நடைபெறும். தோழர் எம். சின்னப்பன் அவர்கள் தலைமையில், தோழர்கள் எஸ். எஸ். தென்னரசு, வி. சண்முகநாதன் — ஆகியோர் பேசுவர்.

★

மதுரை மாவட்டத்தில்

### அறிஞர் அண்ணா

சுற்றுப் பயணம்

**22 8-55**

மாலை 4-மணி : மதுரை, அமெரிக்கன் கல்லூரி

இரவு 10-மணி : மதுரை, 'மணிமகுடம்' நாடகத் தலைமை

**23-8-55**

மாலை 4-மணி : தேவானப்பட்டி.
,, 5-மணி : பெரியகுளம்
,, 7-மணி : ஆண்டிப்பட்டி
இரவு 10-மணி : 'மணிமகுடம்' நாடகத் தலைமை

**24-8-55**

மாலை 4-மணி : கம்பம்
,, 6-மணி : போடிநாயக்கனூர்

**25-8-55**

மாலை 4-மணி ; மதுரை தியாகராசர் கல்லூரி
,, 7-மணி : சோழவந்தான்

---

### மாநில மாநாட்டு நிதிக்காக

சென்னை கோகலே மண்டபத்தில்

21-8-55 ஞாயிறு

காலை 10-மணிக்கு

தோழர் முல்லை சக்தி அவர்கள் தலைமையில்

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள்

ஜூலியஸ் சீசரும் ஜோன் ஆப் ஆர்க்கும்''

என்னும் பொருள்பற்றி பேசுவார்

நன்கொடை : : அணா 8, 4.

சென்னை மாவட்ட தி. மு. க.

---

### அண்ணா-தி. மு. க. பற்றி...

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

போம்-மன்னிப்போம்''-பொது மக்களின் மதிப்பை இந்த வகையிலே ஒரு இயக்கம் பெற்று வருமானால், அது விரைவில் அபாயகரமானதாக மாறி விடுகிறது...நாஜியிசம் எப்படி ஜெர்மன்நாட்டிலே சாதாரண, ஆனால் பலமிக்க மக்களை தன் வசப்படுத்திக் கொண்டது என்பதைக் கொஞ்சம் இங்கே நினைவுபடுத்திப் பார்க்க வேண்டும். அதே அரசியல் — பொருளாதார-மதப்பிரச்னைகள் இங்கேயும் காணக் கிடைக்கின்றன. ஹிட்லருக்கும், அண்ணாதுரைக்கும் உவமை பொருத்தமில்லாமலிருக்கலாம்; ஆனால் தி மு. க.வின் கொள்கை விளக்கம் நாஜியிசக் கொள்கையைப் போலவே இருக்கிறது!''

—எட்படியிருக்கிறது, பார்த்தீர்களா?

கட்டுரை ஆசிரியர் விரும்பினால் தி. மு. க. வையும் நாஜியிசக் கொள்கையையும் ஒப்பிட்டு மனதுக்குள் மகிழ்ந்து கொள்ளட்டும்; ஆனால், அவர் நமக்கும் நாஜிகளுக்கும் உள்ள முக்கியமான வித்யாசங்களைத் தெளிவு படுத்தத் தவறிவிட்டார்.

நாஜிகள் தனிப்பட்ட யூதர்களை விரட்டியடித்தார்கள்! நாமோ அப்படியல்ல; பார்ப்பனீயத்தைத்தான் விரட்டுகிறோமே அன்றி, பார்ப்பனீயத்தைத் துறந்த பார்ப்பனர்களை விரட்டுவதில்லை! ராமையா போன்ற தெளிவற்ற நெஞ்சங்கள் தெளிவு பெறத்தான் இதைக் கூறுகிறோம்!

கட்டுரையாளரின் முடிவுரையையும் படியுங்கள் :

''மற்றைய 'திராவிட' ராஜ்யங்களான ஆந்திரா, மைசூர் போன்ற பிரதேசங்களில் இந்த உற்சாகம் இல்லையாதலால், சுதந்தர திராவிடத்துக்கான கிளர்ச்சி அவ்வளவாக வெற்றி பெறப் போவதில்லை. ஆனால் இந்தக் காரணங்கள் மிகப் பெரிய அளவில் இந்திய யூனியனிலிருந்து தமிழ் நாட்டைப் பிரித்துக் கொள்ளும் கிளர்ச்சியை அவர்கள் தலைவர்கள் துவங்குவதைத் தடுத்து நிறுத்த முடியாது... அந்த மாதிரியான கிளர்ச்சி வெற்றிபெறு வண்ணம் சிலமணி நேரங்களிலேயே அழித்து விடலாம். ஆனால் அப்போதும் ஒரு சங்கடமான நிலைமை உருவாக இடமிருக்கிறது. ஏனெனில் அப்படி ஒரு கிளர்ச்சி ஒழிக்கப்பட்டால், தமிழகத்து மாந்தர் அனைவரும் தாங்கள் பகைவர்களால் வெற்றி கொள்ளப்பட்டு, அடிமைப் படுத்தப் பட்டதாக எண்ணுவதற்கு உண்டான வாய்ப்புகளைத் தந்துவிடும். இது போன்ற சங்கடமான நிலைமை (ஏற்படுவதற்கு வழியில்லை யென்று உறுதியாக நம்பப் பட்டாலும், 'ஏற்படும்' என்று நினைப்பதற்கும் இடமிருக்கிறதே!) உருவாகாததை எதிர்பார்ப்போமாக!''

—இதோடு, சில திட்டல் கணைகளையும் சேர்த்து கட்டுரை முடிக்கப் பட்டிருக்கிறது.

நம்முடைய பிறப்பும், வளர்ப்பும், நாம் பெற்றுவரும் பொலிவும், வலிவும் வடக்கே ஒரு 'ஜன்னி'யைக் கிளப்பியிருக்கிறது என்பதற்கு இந்தக் கட்டுரையொன்றே போதும்! எட்டியிருந்தபடியே பார்வையைச் செலுத்தும் அவர்கள், நம்மை 'ஒருவிதக் கம்யூனிஸ்டுகள்' என்கிறார்கள்! நாஜிக் கொள்கைக்கும், நமக்கும் ஒற்றுமை இருக்கிறதா — என்று தேடுகிறார்கள்!

உண்மை பாதரட்சை தரித்து வெளியே கிளம்புமுன் பொய் உலகத்தையே சுற்றி வந்துவிடுகிறது என்று ஒரு பழமொழியுண்டு'திராவிடத்திலேஉதயமாகும் சுதந்தர ஜோதி 'க்வெஸ்ட்' போன்ற பத்திரிகைகள் மூலம் வெளி உலகுக்குத் தெரிவதைப் போலவே வதந்திகளும் பல உலவ ஆரம்பித்துள்ளன!

ஆனால் ராமையா ஒரு உண்மையைக் கூறிவிட்டார்: அடக்கி ஒழித்துவிடலாம் என மனப்பால் குடிக்கும் ஆச்சாரியார் போன்றோர் நினைவுபடுத்திக் கொள்ள, மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்துகிறோம்.

''விடுதலைச் சுடருக்கும், வெறும் தீபச் சுடருக்கும் உள்ள ஒரே வித்யாசம் இது தான்; தீபச் சுடர் அணைத்தால் அணைந்துவிடும்! விடுதலைச் சுடரோ அணைத்தால் அடங்காது — ஆகாயமளாவப் பெருகும்!''

—(மா.)

---

### வேலை முடிந்து......

★ 8-ம் பக்கத் தொடர்ச்சி

கடைசி தாகத்தினால், ஒரு தவலை நீருக்காக—அவள் திறந்த வாய் மூடாமல் அப்படியே யிருக்கிறது. ஒரு துளி நீர் விழுந்திருந்தால், அது ஒரு வேளை மூடப்பட்டிருக்கலாம்! கண்கள் திறந்தபடியே இருக்கின்றன. யாரும் அதை வருடி மூடுவதற்கில்லை. அவளது ஒரு கால் நிமிராமல் வளைந்தபடியே யிருக்கிறது.

ஒரு பிச்சைக்காரப் பையன்! அவன் மட்டும் அவளை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் பேசுவதுபோல அவனுக்குப் பட்டது.

''நான் எனது வேலையைச் செய்தேன் — வாழ்க்கை முழுமையும் பாரம் சுமந்து திரிந்தேன். குளிமையான ஒரு பகுதியில், வளமான புல் கம்பளத்தின் நடுவே, ஒரு நாளும் வற்ருத நீரூற்றின் பக்கமாக என்னைப் படுக்க வையுங்கள். நான் சாவிலே அமைதி காணுகிறேன்.''

அந்தப் பிச்சைக்காரப் பையன் யார்? எதற்காக இப்படி அவன் பார்த்துக் கொண்டு நிற்கிறன்? ஒரு வேளை அவளது பக்கத்திலேயிருக்கும் பிச்சைப் பாத்திரத்தில்—அந்த மூட்டையில் அவன் தனது விழிகளைப் பதித்திருக்கலாம்! ஃ

---

### பிறைவானம்...

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

*இன்னும் ஆயிர மாயிரமாகக் குவிக்கப்போகிறது... அதை சினிமாவாக எடுக்க ஒரு பிரபல கம்பெனி யோசனை செய்து கொண்டிருக்கிறது... இன்னும் இரண்டு நாளில்...''*

*அந்தப் புதிய மனிதர்—ஆச்சரியம், சிரிப்பு இவை பொங்க பேசிக்கொண்டேயிருந்த சோதிடர் தன் பேச்சை முடிக்கவில்லை...*

*''டளார்'' என்று ஒரு சப்தம் எழும்பியது.*

*என்ன அது? —முத்து திடுக்கிட்டான்.*

*அதற்குள் ''ஐயோ...ஐயா! என்னை ஏன் அடிக்கிறீர்கள்?'' என்ற அலறல் எழும்பியது; சோதிடர் கதறினர்.*

*''ஏன் அடிக்கிறேனு? சோம்பேறிக் கழுதை! உன்னைத் தூக்கிலே அல்லவா போட வேண்டும்! ரேகை பார்க்கிறும், ரேகை! பதினேஞ்சு வருஷம் தவம் கிடந்து, 'ஒண்ணே ஒண்ணு; கண்ணே கண்ணு'ன்னு ஒரு பையன் பிறந்தான்...எட்டு பிள்ளைக்கு கணக்கு சொல்லுகிறுன், முட்டாள்!... ஏய்; நான் வக்கீலுன்னு ரேகை சொல்லுது? அடப்பாவி... நகைக் கடை நல்லமுத்துன்னு ஊர் முழுதும் தெரியும்... என்னை வக்கீலாக் கிட்டியே நீ! ...ம்...'*

*மறுபடி ஒரு குத்து விழுந்தது!*

*''ஐயோ! அப்ப நான் சொன்னதெல்லாம் பொய்யா?'' — சோதிடர் 'ஓ' என்று கத்தினர்.*

*''இல்லை; நூற்றுக்கு நூறு உண்மை! ஆனு—ஆவன்னு படிக்கத் தெரியாத என மனைவியை கதாசிரியைன்னு சொன்னே பாரு...முட்டாளே! ஓடு இங்கிருந்து... இல்லை... மண்டையைப் பிளந்து விடுவேன்...ம்...ஓடு!...ஓடு!'' — அப்பா கோபமாகக் கத்தினர்.*

*''ஐயோ; போறேனே!'' என்று அலறிக்கொண்டே ஓடி வந்தார், சோதிடர்.*

*வாசலுக்கு வந்தார்.*

*'படார்' என்ற ஒரு சப்தம் கேட்டது. பயந்து விட்டார். பரபரப்புடன் பார்த்தார். பலூன் வெடித்த விட்டது! 'கலகல'வென்று சிரித்துக் கொண்டு நின்றுன் முத்து.*

*சோதிடருக்கு எப்படி இருக்கும்? ஊரை ஏய்க்கப் புது வழி கண்டார் — உழைக்காமல் பிழைத்தார் — அப்படிப்பட்ட 'பகல் கொள்ளை'க்காரனையிற்றே அவர், அவரையே ஏமாற்றிவிட்டானே முத்து!*

*''நான் அப்பவே நினைத்தேன், இந்த ஆள் ஏதோ தப்பானவர் என்று. அதான் கேள்விக்கெல்லாம் 'டக் டக்'னு பதில் தந்தேன்; இல்லாததைச் சொன்னேன்—நல்ல பாடம் கற்பித்தேன்'' என்று முணுமுணுத்தான் முத்து. தெருக்கோடியில் ஓடிக்கொண்டிருந்த 'சோதிடரை'ப் பார்த்தான். சிரித்தான். வீட்டிற்குள் ஓடினுன்.*

**—சொர்ணம்.**

## பிறை வானம்

...பிள்ளைகள் பகுதி...



**ஊரை ஏய்க்க புதுவழி கண்டார் — உழைக்காமல் பிழைத்தார் — அதற்கும் "பகிரங்கத் திருட்டு"க்கும் என்ன வேற்றுமை? ஆனால்...அந்தப் பகல் கொள்ளைக் காரனின் முகமூடி கிழிகிறது—முட்டாள்தனம் தெரிகிறது — ஒரு குறும்புத் தம்பியால்! அந்தக் கரும்புக் கதைதான்......**

# ஓடினான்; ஓடினான்!

மணி இரண்டு!

பள்ளிக்கூடத்து பெரிய மணி, 'டாண், டாண்' என்று 'முதல் மணி' அடித்து ஓய்ந்தது.

முதுகிலே புத்தகப் பை; கையிலே குடை—இந்தக் கோலத்தோடு, பள்ளிக் கூடத்தை நோக்கி வேக வேகமாக நடந்து கொண்டிருந்தான் முத்து.

"தம்பி...!"—அந்த சமயத்தில் இப்படி ஒரு குரல் எழும்பியது. அந்தக் குரலில்தான் எத்தனை அன்பு! பரிவு!

முத்து திரும்பிப் பார்த்தான். அவனுக்குப் பின்னால் ஒரு மனிதர் வந்துகொண்டிருந்தார். அவர்தான் அழைத்ததோ? முத்து நின்றான். அந்த மனிதரின் வெற்றிலைக் காவி படிந்த பற்களெல்லாம் வெளியே தெரிந்தன; அப்படி சிரித்தார். அவர் ஏன் தன்னை அழைக்க வேண்டும்? ஏன் இப்படி சிரிக்க வேண்டும்? இது என்ன புதுமை! —இப்படி எண்ணினான் முத்து. "ஏன்? யாரைக் கூப்பிட்டீர்கள்?" என்று கேட்டான்.

"உன்னைத்தான் கண்ணு!" என்று சொன்னார் அந்த மனிதர். மறுபடியும் சிரித்தார். அதற்குள் முத்துவிடம் வந்து விட்டார்.

"நீங்க யாரு? உங்களை நான் பார்த்ததே இல்லையே!"-வெடுக்கென்று கேட்டான் முத்து. பொல்லாத குறும்புக்காரனாயிற்றே, அவன்!

"சும்மாத்தான் கூப்பிட்டேன், தம்பி! தனியா நடந்தேன்; என்னவோ போல இருந்தது; பேச்சுத் துணைத் தேடினேன்; நீ கிடைத்தாய்; அவ்வளவுதான். வா, போகலாம்!" என்றார் அவர். முத்துவும் கூட நடந்தான்.

சற்று நேரம் சென்றது.

"ஏன் தம்பி, உன் வீடு எது?" —மெதுவாகக் கேட்டார் அந்த மனிதர்.

முத்துவுக்குப் பயமாக இருந்தது. 'பிள்ளைப் பிடிப்பவன்' என்பார்களே, அந்த மாதிரி மனிதரோ இவர் — என்று நினைத்தான். இருந்தாலும் இயல்பான துடுக்குத்தனம் போகுமா? திட்டிக் கொண்டிருக்கும் அப்பாவின் வாய்—அடிக்க வரும் அம்மாவின் கை—பாய்ந்து வரும் ஆசிரியரின் பிரம்பு — இவை அனைத்துமே பின் வாங்கிவிடுமே சுட்டித் தனத்தில்—வேடிக்கைப் பேச்சில்! இந்த மனிதர் எம்மாத்திரம்?

"அதோ, அந்தக் கோடியிலே இருக்கே, அந்த மஞ்சள் மாடி வீடுதான் எங்க வீடு!" என்றான்.

"ஓகோ! ஆமாம் தம்பீ; நீ மட்டும் தனியா படிக்கப் போறியே, உனக்கு அண்ணன் 'கிண்ணன்' இல்லியா?"—மறுபடி புதுக் கேள்வி போட்டார் அவர்.

'இவர் ஏன் இப்படியெல்லாம் கேட்க வேண்டும்?—சிரித்து சிரித்தல்லவா விஷயங்களைக் கிரகிக்கிறார்!'—என்று யோசித்தான் முத்து. ஏதோ முடிவு செய்தான். பதிலும் சொன்னான்.

"கிண்ணன் யாருமில்லே; ஆனால் மூன்று அண்ணன் இருக்காங்க! எல்லோரும் 'காலேஜி'லே படிக்கிறாங்க. ஒரு அண்ணன் 'மெட்ராசி'லே—அடுத்த அண்ணன் சிதம்பரத்திலே—கடைசி அண்ணன் கும்பகோணத்திலே — போதுமா?" என்று சொன்னான்.

"ஆமாம்! ஏன் இப்படி தனித் தனி ஊரிலே படிக்கிறாங்க?"

"ஏனா? மூணு பேரும் எப்பப் பார்த்தாலும் சண்டை போட்டுக்குவாங்க; அதனாலேதான் எங்க அப்பா இந்த வேலையைச் செய்தாங்க!"

"ஓகோ; அப்படியா? போகட்டும். ஏன் தம்பி; உனக்கு அக்கா யாரும் இல்லையா?"

"இல்லேன்னு யாரு சொன்னது? மூன்று அக்கா இருக்காங்களே! ஒரு அக்கா இந்தி படிக்குது; இன்னொரு அக்கா 'தமிழ் வித்வானு'க்காக படிச்சுக்கிட்டிருக்கு; கடைசிஅக்கா 'மெட்ரிக்' பரிட்சை எழுதப் போவுது, இந்த வருஷம்!..."

"சபாஷ்! உங்க வீட்டிலே எல்லாரும் நல்லா படிக்கிறாங்க போலிருக்கே! அப்படித்தான் இருக்கணும்!"

"ஆமாம்;எங்க அப்பா,அம்மா ரெண்டு பேருமே படிச்சவங்களாச்சே, அதனாலேதான்!"

"அடடா! கேட்க மறந்துட்டேனே; உங்க அப்பா யாரு? அவருக்கு என்ன வேலை?"

"தெரியாதா உங்களுக்கு? இந்த ஊருக்கு புதிசு போலேயிருக்கு!"

"ஆமாம் தம்பீ; இப்பத்தான் ரயிலைவிட்டு இறங்கி வர்ரேன்"

"ஓகோ, அப்படியா? எங்க அப்பா இந்த ஊர் சர்க்கார் வக்கீல்! இன்னும் ரெண்டு மாதத்திலே 'மாஜிஸ்டிரேட்' வேலைக்குப் போகப் போறாங்க! ஐயையோ! சொல்லிட்டேனே! இது ரொம்ப ரொம்ப ரகசியமாச்சே! 'வெளியே சொன்னால் தோலை உறிச்சுடுவேன்'னு சொல்லியிருக்காரே அப்பா. ஐயா... இதை நீங்க யாருக்கிட்டேயும் சொல்லிடாதீங்க...?"

"நான் ஏன் தம்பி சொல்லப் போறேன். அதோ, இன்னும் கொஞ்ச தூரம் போனவுடன் எல்லாமே மறந்துடும்...அதிருக்கட்டும்; உங்க அம்மா என்ன படிச்சிருக்காங்க?..."

"பி. ஏ.! ஆனால் வேலைக்குப் போக மாட்டாங்க. வீட்டிலே இருந்து கதை எழுதுவாங்க. எலலா பத்திரிகையிலும் வருமே! போன மாசம்கூட ஒரு நாவல் போட்டியிலே ஆயிரம் ரூபாய் பரிசு வாங்கினுங்க... ரொம்ப நல்ல அம்மா! என்னை அடிக்கவே மாட்டாங்க..."

"ஊம்... அப்படியா? நீ அதிர்ஷ்டசாலிதான்! ஆமாம் தம்பி; உனக்கு தம்பி, தங்கை யாரும் இல்லியா?"

"இல்லியே! ஆனால் அடுத்த மாசம் எங்க அம்மாவுக்கு ஒரு குழந்தை பிறக்குமாம்! அது தம்பியோ — தங்கையோ—இப்ப எப்படித் தெரியும்?"

பள்ளிக் கூடம் நெருங்கி விட்டது!

"நீ ரொம்ப நல்ல தம்பி! நான் போகட்டுமா?"—என்று நகர்ந்தார், அந்தப் புதிய மனிதர்.

"என்ன சார், இவ்வளவு தூரம் உங்களோடு பேசிக்கிட்டு வந்தேன்; சும்மா போறீங்களே! அதோ அந்தக் கடையிலே ஒரே ஒரு பலூன் வாங்கித் தாங்களேன்!" என்றான் முத்து, குறும்பாக!

அந்த மனிதர் யோசிக்கவில்லை. கடைக்குப் போனார். பெரிய பலூன் ஒன்று வாங்கினார். முத்துவிடம் தந்தார். அவனுக்கு ஏக மகிழ்ச்சி! பள்ளிக்குள் ஓடினான். அந்த மனிதரும் நடந்தார்.

★

மாலை நேரம்!

மணி மூன்றரை!

'டிரில்' ஆசிரியர் பள்ளிக்கு வரவில்லையாம்; அதனால் முத்து பள்ளி முடிவதற்கு முன்னேயே வீட்டுக்குத் திரும்பினான்.

வாசலில் அடி வைத்ததும், ஏதோ புதிய குரல் கேட்டது. நின்றான். கவனித்தான். வேறு யாருடைய குரலுமல்ல அது; பள்ளிக்குச் செல்லும்போது அவனுடன் பேசிக்கொண்டு வந்தாரே, அந்தப் புதிய மனிதருடையதுதான். முத்துவுக்கு 'திக்'கென்றது. உற்றுக் கேட்டான்.

"ஆகா! என்ன அருமையான கை! நானும் ஐம்பது வருடமாக உலகம் முழுதும் சுற்றுகிறேன்; ரேகை பார்க்கிறேன்; இப்படி ஒரு யோகக் கையைப் பார்த்ததேயில்லையே!"—

ஆமாம்! அந்த மனிதருடைய குரலேதான் அது!

"சரிங்க! எனக்கு எத்தனை பிள்ளைகள்? கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்கள், பார்ப்போம்!" — இது அப்பாவின் குரல்!

"குழந்தைகளா? அதற்கென்ன பஞ்சம்?......பொருட் செல்வம் மட்டுமல்ல; மக்கள் செல்வமும் குறைவில்லையே உங்களுக்கு!...நான்கு பிள்ளைகள்! ஆமாம்...நான்கு!...மூத்தவர் மூவரும் வெளியூர் 'காலேஜ்'களில் படிக்கிறார்கள்! இளையவன் – சிறியவன் உள்ளூரிலே படிக்கிறான்! அது மட்டுமா? அதோ, அந்த ரேகை என்ன சொல்கிறது தெரியுமா? கருத்தோடு படிக்கும் மூன்று பெண்களும் உண்டு உங்களுக்கு..."

"என்ன? என்ன?..."

"அது மட்டுமா? கடைசியில் ...அடுத்த மாதம் பதிமூன்றும் தேதி—நள்ளிரவு ஒரு மணிக்கு இன்னுமொரு பெண்ணும் பிறக்கப் போகிறது. ராசாத்தி மாதிரி! அது நடனம் கற்றுக் கொண்டு உலகத்தையே ஆட்டி வைக்கப் போகிறது!"

"சரி... இருக்கட்டும்... என் தொழில் நிலைமை எப்படியிருக்கு? கொஞ்சம் பாருங்க!..."

"ஆகா...ஆகா! என்ன ரேகை! என்ன ரேகை! ஐயா, வக்கீலையா,இன்னும் இரண்டே மாதத்திலே—ஏன், இன்றிலிருந்து ஐம்பதாவது நாள் நீங்கள் 'மாஜிஸ்ட்ரேட்' ஆகப் போகிறீர்கள். மேலிடத்திலே பேச்சு நடக்கிறது..."

"ஓகோ!... அப்படியா? அப்புறம்?..."

"அப்பப்பா! என்ன அருமை! என்ன சொல்வதென்றே புரியவில்லையே எனக்கு! பிறந்தாலும் இப்படியல்லவா பிறக்க வேண்டும்! உங்கள் மனைவி எழுதிய கதை ஒன்றுக்கு யோகம் வருகிறது! பெருத்த யோகம் ஓடி வருகிறது! போன மாதம் ஆயிரம் ரூபாய் பரிசு தந்ததே ஒரு நாவல் — அது

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

# 'எழுத்தாணி'

கு. மதியன்னன்: போடி.

(?) நேரு பண்டிதரின் ரஷ்ய விஜயத்தால் யாருக்கு என்ன லாபம் கிடைத்தது?

யாருக்கு என்ன லாபமோ; ஆனல் நேருவிற்கு அவருடைய ரஷ்ய மொழிபெயர்ப்புப் புத்தகத்தின் விற்பனை காரணமாக ஒரு லட்சத்து இருபதினயிரம் ரூபாய்கள் கிடைத்தனவாம்! அதில் விருந்து வைபவங்களுக்காக அவர் செலவிட்ட தொகை ரூ 50,000. லாபத்தை நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள்!

மு. ரே. இளந்தமிழன்: நேகமம்.

(?) வானவில்லும், மின்னலும் அடிக்கடி விண்ணில் தோன்றி மறைந்து விடுகின்றனவே: இது யாருக்குப்பாடம் புகட்டவோ?

வானவில் வாலிபத்துக்கு; மின்னல் 'அரசியல் ஸ்டண்ட்'காரர்களுக்கு!

வ. சரவணன்; அம்மையப்பட்டு.

(?) எதிரியின் உயர்ந்த லட்சியத்தை உணர முடியாதவர்கள் என்ன செய்வார்கள்?

ஒணுகை மாறுவார்கள்; இல்லாவிட்டால் 'நொந்து போனவர் கட்சி'யில் அங்கத்தினராவார்கள்!

அசு. ஹை; அரகண்டநல்லூர்.

(?) 'பன்றியுடன் சேர்ந்த கன்றுக்குட்டி'—இதற்கு யாரை உதாரணம் காட்டலாம்?

தோழர் ஜெயப்பிரகாஷ் நாராயண் டெல்லி மத்திய அரசாங்கத்தில் மந்திரியாகப் போவதாக ஒரு வதந்தி உலவுகிறது!

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:

(●) கு. பெ. இராமசாமி,
குறிச்சிக்குளம்,
(அசாவீரன் குடிகாடு)
(திருச்சி மாவட்டம்)

வி. கருப்பையா; அல்லிநகரம்.

(?) திருப்பதிக்குப் போனல் மொட்டை அடிக்கிறர்களே: ஏன்?

திருப்பதியில் மட்டுமென்ன; காமராசர் திட்டத்தோடு டெல்லிக்குப் போனல் அங்கும் அதுதான் நடக்கிறது!

(?) முட்டாளுக்கும், அயோக்கியனுக்கும் உள்ள வித்யாசம் என்ன?

முட்டாள் சாதுவான ஆடு; அயோக்கியன் கொம்புள்ள எருமை!

(●) கு. பெ. இராமசாமி;
குறிச்சிக்குளம்.

(?) கோவாவில் போர்ச்சுகீசிய போர் வெறியர்கள் தினம் தினம் மக்களை மாய்த்துக் கொண்டிருப்பதை பார்த்துக் கொண்டு வாளாவிருக்கும் நேருவை, ஐவர் பத்தினியாம் திரௌபதியை துரியோதனன் துகில் உறித்ததை நேரே பார்த்தும் பொறுமையே பெரிதென் றெண்ணி வாளாவிருந்த தருமருக்கு ஒப்பிடலாமா?

ஒப்பிடலாம். ஆனல், இந்த 'நேரு தர்மர்' எதிர்பார்ப்பது போல 'கோவாத் திரௌபதை'க்குத் துணி வழங்க எந்த கிருஷ்ண பரமாத்மாவும் வர மாட்டார்!

## உங்கள் பார்வை

தாம்பரம்
5—8—55

'முரசொலி' ஆங்கிலத்திலும் வெளிவரப் போவது கண்டு நான் இறுமாப் படைகின்றேன். எங்கள் கல்லூரியில் சில மாணவர்கள் ஆங்கிலம படித்த போதையில் தமிழ்ப் பத்திரிகைகளைப் படிப்பதையே வெறுக்கின்றனா. அப்படிப்பட்டவர்கள் ஆங்கில இதழ்மூலமாவது நமது கொள்கைகளை அறியட்டும் மற்றும் நமது தோழர்களான ஆந்திரர்—மலையாளி—கன்னடியர் —முதலியோரும் பரந்த அளவுக்கு, நாட்டுப் பிரிவினை கொள்கையினை தெரிந்து கொள்வதற்கு நல்லதொரு வாய்ப்பு! வெகு விரைவில் வெளிவர ஏற்பாடு செய்யுங்கள்.

— செ. வில்லிமாறன்.
பி. ஏ (ஹானர்ஸ்) இறுதி வகுப்பு,
கருஸ்துவக் கல்லூரி.


### சென்னையில் ஏலம்!

* உங்களுக்குத் தேவைப்படும் எந்தவித சாமானையும் (கார் முதல் குண்டூசி வரை) எங்கள் 'ஆக்ஷன் ரூமி'ல் வாங்கலாம்.
* உங்களுக்குத்தேவைப்படாத சாமான்களை எங்கள் மூலம் விற்கலாம்.

விபரங்களுக்கு:

ஹான்சன் அண் கோ.,
(ஆக்ஷனர்ஸ் அண்ட் கமிஷன் ஏஜண்ட்ஸ்)
ஓடியன் டாக்கீஸ் சமீபம்,
ராயப்பேட்டை: சென்னை-14



